# ஞானசம்பந்தம்

மலர் 13] ஜய௵ வைகாசிமீ 10—6—54 [இதழ் 7

தருமபுர ஆதீனம் குருபூஜை விழவில்



முகப்புப் பந்தல் அலங்காரக் காட்சி

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர் : ச. தண்டபாணி தேசிகர்.
தருமபுர ஆதீனம்

தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவில்

25வது மகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்மீது

அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர்

திரு. E. S. வரதராஜய்யர் அவர்கள் பாடிய

## வாழ்த்து.

தென்னு டுடைய சிவமும் தமிழும் செழித் துயரப்
பொன்னுர் தரும புரத்திறை மைகொண்டு போற்றிவரும்
நன்னுவலர் கட்குப் பொன்னுடை நாடொறும் நல்கிவரும்
கன்னு வுயர் சுப்பிரமணிப் பேர்கொண்ட கண்ணியனே (1)


பெற்ருய் தருமை மடத்தின் தலைமை பிரியமுடன்
அற்ருர்க் குணவீங் தருந்தமிழ் நூல்திரி பையமறக்
கற்ருர் தருவென் ஞெளிர்வை மலிந்த கவின் புகழார்
நற்ருர் அணியு முயர்சுப்பிரமணி நாயகமே. (2)

கல்லாடை வேய்ந்துயர் கண்மணி பூண்டு கனக கண்டித்
தொல்லா பரணத்துடன் சுப்பிரமணி சுந்தரன்செய்
நல்லா னுயர் ஞானசம்பந்தன் பூஜை நனிவிழவைப்
பல்லார் புகழ்வ தென்சிறப் பென்னென் று பன்னுவதே (3)

சைவமுழக்கும் தமிழ் முழக்கும் முயர் சாத்திரத்தின்
தெய்வ முழக்கும் சமயப்ரசங்கிகள் செய்முழக்கும்
செய்ய வியத்தின் முழக்கும் கடலிற் றிகழ்தருமால்
ஐயன் உயர்சுப்பிரமணி பூசைசெய் யாலயத்தே. (4)

அல்லார் கனத்தன் அடிமறவா மலவன் புகழை
நல்லார்வம் கொண்டு பயிலுநன் னுவினன் நற்றமிழும்
பல்லார் புகழ்தரும் சைவமும் ஓங்கப் பரிந்து பொன்விண்
நல்லானினியும் உயர்சுப்பிரமணி நற்றவனே. (5)

குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கொலுக்காட்சி வழங்கியருளுதல்



ஸ்ரீ ஞானபுரீசுவரர் மணவாள கோலத்தில் புஷ்ப்பபல்லக்கில்
எழுந்தருளி வரும் வருகாட்சி



ஸ்ரீ ஞானபுரீசுவரர், திருத்தேரில் வீதியுலாக்காட்சி.

498.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 13] ஜயஹு வைகாசிமீ 10—6—54. [இதழ் 7

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞுகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

# ஆண்டுக்கு ஒருநாள்

ஞாயிறுந்திங்களும் முதலாகிய எத்தனையோ நாட்கள் வருகின்றன; போகின்றன. நாளறி கருவியாக—காலத்தைக் கணிக்குந் துணையாக இருக்கிற சூரிய சந்திரர்களும் நட்சத்திரங்களும் உதிக்கின்றன; மறைகின்றன. ஆண்டுகளை அறுபதாகவும், மாதங்களைப் பன்னிரண்டாகவும், நாட்களை ஏழாகவும் மண்டலித்து அமைத்த மகானின் புத்திசாதுர்யந் தான் என்னே! மக்கள் முன்வந்த ஞாயிறுதான் இன்று, சென்ற சித்திரைதான் இன்று, சென்ற விஜயதான் இன்று என்று ஏழுநாள்கழித்து பன்னிரண்டுமாதம்கழித்து அறுபது ஆண்டு கழித்து எண்ணுகிறுர்கள். உண்மையில் சென்ற சித்திரையா இன்றைய சித்திரை? சென்ற ஞாயிரு இன்றைய ஞாயிறு? இல்லையே! சென்ற பிரபவ ஆண்டில் காளையாக இருந்தவன் இந்தப் பிரபவ ஆண்டில் கிழமாகிறுன். அறிவாளியாக மதிக்கப்பெற்றவன் முட்டாளாக்கப்படுகிறுன்; அரசனுயிருந்தவன் அநாதையாகிறுன். எல்லாம் காலச்சுழலின் திரிபல்லவா? இதனை உள்ளபடி உணர்பவர்கள் சிலர்தான். இந்த

உண்மையை உணர்ந்து அனைவர்க்கும் உணர்த்த விரும்பிய வள்ளுவர் "நாளென்று நினையாதே உன் உயிரை அறுக்கும் வாள் அது. நினைவிலிருக்கட்டும்" என்கிறார். பின்வந்த நீதிநூலாசிரியர் ஒருவர் காலச்சுழல் வினைப்பரிபாகத்தால் வேறு வேறு பயனை அளிக்கிறது என்று அறுவுறுத்த சேனைத் தலைவராக — சேவிக்க யானைமேற்சென்றோர் வேறாகி வீழ்வர் என்கின்றார். இத்தகைய ஏற்ற இழிவற்ற — என்றும் உறுதியான — சாவா மூவாப் பெருவாழ்வை எய்தியவர்கள் சிவாநுபூதிச் செல்வர்கள். அவர்கள் நம்மிடையே நம்போல் வாழ்ந்து நம்மையாட்கொண்டு ஒளியான திருமேனி தாங்கியும் நம்மை நாணாளும் ஆட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டு சிவசாயுச்சியம் எய்திய சிவஞானிகள். அவர்கள் சிவசாயுச்சியம் எய்திய நாளே ஆண்டுக்கு ஒருநாள்; அறிவினுக்கு அறிவாக அவர்கள் என்றும் நின்று நிலவுவதை, நாம் மறக்கினும் நினைவுகொள்ளச்செய்யுந் திருநாள்; குருநாள்.

அந்நாளிலே அவர்கள் சிம்மராசியிற் சூரியனைப்போல தமது ஒளி முழுதும் உலகவர் அறிந்துய்யத் தமது ஞான பீடத்தில் எழுந்தருளியிருக்கும் குருநாதனை அதிட்டித்து நின்றும், பீட லிங்க விருக்ஷ சித்திர சமாதி நிலையங்களில் விளங்கிநின்றும் அருண்மழையைப் பொழிவர். அந்நாளை அறிந்து வழிபட்டுய்தல் நம்மனோர் கடமை.

அந்நாளில் ஒருநாள்தான் இப்போது வந்த வைகாசி உற்சவத் திருநாளாகிய குருஞானசம்பந்தர் பெருநாள்.

அந்நாள் வருவதற்கு இருபத்திரண்டுநாள் முன்னரே சிவானுபவச் சோதிவீசத் தொடங்கிற்று; திருமடத்தில், வேதமாக — ஆகமமாகத் தோத்திரமாக — சாத்திரமாக — இலக்கியமாக — இலக்கணமாக — தேவார இன்னிசையாக — கண் வழிபுகுந்து கருத்துவளர்க்கும் நாடகமாக - நல்லுரைகளாக எல்லாம். அம்மட்டோ? அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பரென அறிந்து சுட்டிக்காட்டிய தோன்றலார் திருஞானசம்பந்தப்பிள்ளையாரின் இரண்டாந் திருமுறை வெளியீடாகவும் விளங்கியது.

இங்ஙனம் ஆண்டுக்கொருநாளே ஆண்டு முழுதும் ஒளி வீசுந் திருநாளாக அமைந்ததைத் தமிழுலகம் பாராட்டாமல் இருக்கமுடியாது. இங்ஙனம் இதனை இன்று விளக்கி நடைபெறச்செய்த இருபத்தைந்தாவது குருஞானசம்பந்தப் பெருமானையும் போற்றாமலிருக்கமுடியாது.

இங்ஙனம் எல்லாரையும் பணிகொள்ளும் சொக்கலிங்கப் பெருமானையும் துதியாமலிருக்கமுடியாது.

வாழ்க திருவருள்! வளர்க நம் தருமை!!

---

## Extracts from the Visitors' Book of
# Sri Panchanathiswaraswami Temple,
## Tiruvaiyaru, Tanjore Taluk & District.

இன்று நானும் எனது பாரியாளும் பஞ்சநதீசுவரப்பெருமானின் திவ்விய தரிசனம் கிடைத்த பாக்கியம் பெற்று மனமகிழ்ந்தோம். பிள்ளைகள் பாடிய பாட்டுக்களையும் கேட்டு ஆனந்தமடைந்தோம். கோயில் அதிகாரிகள் காட்டிய உபசரணைக்காக அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றி கூறுகிறோம்.

(Sd) C. COOMARASWAMI,

Ceylon High Commissioner.

20—5—54.

# *அரசியலும் - சமயமும்

வித்துவான், திரு. சேது சுப்பிரமணியபிள்ளை

இவ்வுலகம் தோன்றியது முதல் இதன்கண் கணக்கில்லாத மக்கள் பிறந்தார்கள்; இதன்கண்விளையும் நுகர்ச்சிப் பொருள்களை நுகர்ந்து இதனிலேயே மறைந்தார்கள். இவர்களில் சிலர் இன்றுள்ள மக்களாலும், இனிவரும் மக்களாலும் போற்றிக் கொண்டாடும்படி அன்றும் இன்றும் என்றும் புகழப்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? இவர்கள் தோன்றியது முதல் பொறாமை, ஆசை, வஞ்சகம், கோபம், சுயநலம் ஆகிய தீயகுணங்களை விட்டு, எல்லாம் வல்ல இறைவனால் அளிக்கப்பட்ட பகுத்தறிவினால் அன்பு, அருள் என்னும் குணங்களைக்கொண்டு கடவுளால் படைக்கப்பட்ட எல்லா உயிர்களும் இன்பம் அடைந்து வாழத் தங்கள் வாழ்க்கையில் அரும் பெருந்தொண்டுகளைச் செய்து முடித்தார்கள். முடித்தவர்களே முக்காலத்திலும் புகழப் படுகிறார்கள்.

அழுக்கு நீரில் வாழும் புழு அதுவே ஆனந்தம் என்று எண்ணுவது போல இருத்தல் ஆகாது என்று எண்ணி, சிலர் அறநெறியைப் பின்பற்றி தங்களுடைய புகழுடம்பை நிலைநிறுத்தத் தவம் செய்து சத்துவ குணத்தை வளர்த்து எங்கும் நிறைந்த இறைவனைக் கண்டார்கள். கண்ட பேரின்பத்தைத் "தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற பழமொழிப்படி எல்லா மக்களும் அடையும் பொருட்டு அறிவுறுத்தியுள்ளார்கள்.

வேறுசிலர் நல்லொழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தங்களுடைய மதம், மொழி, நாடு, இனம், ஆகியவைகள் எதிரிகளால் அழிக்கப்படாமல் காப்பதற்காக இராசச குணத்தை மேற்கொண்டு மகிழ்ச்சியுடன் வீரமும்

---

*இது 14—5—54-ல் திருக்குவளையில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

விளங்க வாளைக் கையிலேந்தி எதிரிகளையும், அவரது படை களையும் கலக்கி புறமுதுகிட்டு ஓடும்படி செய்து வீரவாழ்க்கை யில் வெற்றிகொண்டு வாழ்ந்து அவ்வீரத்தை அனைவர்க்கும் அறிவுறுத்தியுள்ளார்கள். மேற்கூறிய சத்துவகுணமும். இராசச குணமும் கொண்டமக்களே அரும்பெருந் தொண்டு களைச் செய்து புகழ்பெறத் தகுதி உள்ளவராவார்கள்.

மெய்ப்பொருள் நாயனுரை வெல்ல நினைத்து வாளுடன் எதிர்த்து வந்தான் முத்திநாதன். இம்முத்திநாதனது ஆண்மையை அடக்கிப் புறமுதுகுகாட்டி ஓடும்படிச்செய்தார் மெய்ப்பொருளார். இவன் பலமுறை எதிர்த்தும் தோற்ருே டினுன். தோற்கும்படிச்செய்த இவரது வல்லமை அளவிடற் கரியது. முடிவில் வஞ்சகமாக விபூதி அணிந்த அடியார் வேடம் பூண்டு இவரிடம்சென்று சைவாகமத்துள் ஓராக மத்தை உமக்கு உபதேசிப்பேன் என்று சொன்னுன் இம் முத்திநாதன் சொல்லைக் கேட்டதும் வணங்கினுர். அவர் வணங்கும்போது இவன் மறைத்துவைத்த உடை வாளை எடுத்து அவரைக் குத்தினுன். அளவிடற்கரிய வல்லமை யுடைய இவர் இச்செயல்செய்த இவனைச் சும்மாவிடுவரோ? அதுசமயும் சிவவடிவமே மெய்ப்பொருள் என்று அவனை வணங்கினுர். அருகிருந்த தத்தன் தன் கைவாளினுல் இச் செயல்கண்டு தரியாது அவனைக்கொல்லப்போகும் பொழுதில் இரத்தம் சொரிந்து கீழே விழப்போகும் இவர் சிவனடியா ராதலால் யாதொரு இடையூறும் செய்யாதே என்று தடுத்து வீழ்ந்தார். மிக்க வல்லமையுடைய இவர் குத்தியவனுக்கு யாதொரு இடையூறும் செய்யாத காரணம் என்ன? கோழையா? சிவவேடத்தில் உள்ள அழுத்தமான பற்றல் லவா காரணம்? இவ்விதம் தான்கொண்ட கொள்கை மாருமல் உயிரைக்கொடுத்தும், சமயத்திற்காகவே அரசியல் செய்தார். கருணை வடிவாகிய காந்தி அடிகளும் கோட்ஸே யைக் கொல்லவேண்டாம் என்று அவன் காலில் விழுந்தார். விழுந்தது கோழைத்தனம் என்று எவராவது கூறுவார்களா? இவ்விதம் பகைவர்களுடன் போரிடும்பொழுது இராசச

குணம் கொண்டவராயினும் சமயத்தைக் காப்பதில் சத்துவ குணமே கொண்டு விளங்கினர்கள்.

மேலும் சேரமான்பெருமாணயனர் யானைமீது நகர்வலம் வரும்பொழுது மழையினலே கரைத்த உவர்மண் ஊறப் பெற்று வெளுத்திருத்தலால் விபூதியை அணிந்த சிவனடியார் வேடம்போன்று உவர்மண் காயப்பெற்று வெண்மைநிற உடம்புடைய வண்ணனைக்கண்டார். அப்பொழுதே கீழிறங்கி அவன் காலில் விழுந்தார். அடிவண்ணன் என்று அவன் கூற இவநும் அடிச்சேரன் என்று திருநீற்று வேடத்தை நினைப்பித்தீர் வருந்தாதே போம் என்று அருளிச்செய்தார்.

(தொடரும்)

---

# தமிழ் கற்குமுறை

அந்தாதியிற்சிலவுலா மாலையிற்சிலசொ
லரியபிள்ளைத் தமிழ்சில
அழகியகலம்பக மதிற்சிலபுராணங்க
ளைந்திலக்கண நீதிநூல்
நந்தாதகோவை யிதிகாசகாவியமாதி
நற்சங்க நூலிற்சில
நாதன்சீர்த்திருமுறைகள்சில தருக்கஞ்சில்ல
ஞானமா நூல்கள்சில
சிந்தாதுபலவினும் வல்லவாசிரியரைத்
தேடி யெண்ணைந்தாயிரஞ்
செய்யுட்களைக்கேட்டுணர்ந்து சிந்திப்பதே
செந்தமிழை யோதுமுறையாம்
சிந்திக்கவரியசுய பாஷைபலவற்றையுஞ்
சீராக்க வளரண்ணலே
தேசபணிவிடையேந்தி மாசகலும்வேதாந்தி
தேசுமிகு மாகாந்தியே.

—மகாத்மாகாந்தி சதகம்.

504.

# *கொடிகளின் தத்துவம்

சீகாழி. பெருமிலக்கிழார், திரு. C. இராமநாத முதலியார்

பெரியோர்களே !

அவைத்தலைவர் அவர்களுக்கும் இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் அங்கத்தினர்களுக்கும் இங்குக் குழுமியிருக்கும் பெரியோர்களுக்கும் சகோதர சகோதரிகளுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கம் உரித்தாகுக.

முதற்கண் இப் பஞ்சாயத்து போர்டு அலுவலகக் கட்டிடத் திறப்புவிழா வைபவத்தில் என்னை, தேசியக்கொடி ஏற்றுவிக்கும்படி கேட்டுக்கொண்ட தலைவர் முதலானவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொடி ஏற்றுவதற்குமுன் அதன் வரலாறு உட்பொருள் முதலியவைகளைப்பற்றிச் சிந்திப்பது நமது கடமையாகும். எல்லாம்வல்ல இறைவனாகிய பரமசிவனுக்கு ரிஷபக்கொடியும், மகாவிஷ்ணுவுக்குக் கருடக்கொடியும், பிர்ம்மாவுக்கு அன்னக்கொடியும் இருக்கின்றன. கடவுள்களுக்குக் கொடி அநேக அடிப்படைகருத்துக்களுடன் அமைந்திருக்கிறது.

உற்சவகாலங்களில் துவஜாரோகணம் என்று கொடியேற்றுவிழா நடக்கிறது. அதாவது ரிக்ஷபரூபத்தை எழுதிப் பூஜைசெய்து கொடிமரம் என்ற துவஜஸ்தம்பத்தின் உச்சியில் கயிறுகொண்டு ஏற்றுவது. இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லப்படும் மந்திரங்கள் யாவும் மக்கள் நன்ருக வாழவேண்டும் என்றே குறிப்பிடுகின்றன. கொடியில் எழுதப்படும் ரிக்ஷபரூபம் துள்ளுகின்ற காளைமாட்டின் உருவமாகும். இது தருமத்தின் உருவமாகவும், ஆத்மாவின் உருவமாகவும் பெரியோர் கொள்வர். எனவே தருமத்தையும் ஆத்மாக்களையும் கீழ் நிலையிருந்து மேல் நிலைக்கு உயர்த்தும் என்ற அறிகுறியாகக் கொடியேற்றம் நடக்கிறது. இந்தக் கொடியைப்

*25—4—54 ல் திருப்புன்கூர் – கன்யாகுடியில் நிகழ்த்திய கொடியேற்றுவிழாச் சொற்பொழிவு.

506.



பற்றி உமாபதிசிவாசாரியார் 'கொடிக்கவி' என்றபாடல்களில் அநேக நுண்ணிய கருத்துக்களை உள்ளடக்கி எழுதியுள்ளார்.

வரலாறு – தில்லை மூவாயிரம் பேர்களில் ஒருவராகிய உமாபதிசிவாசாரியாரை தள்ளிவைத்து, அவர் கொற்றவன் குடியிலிருக்க, கோயிலில் கொடி ஏருததால், அவரைக் கூப்பிட்டுக் கொடி ஏற்றும்படிக் கடவுள் ஆஞ்ஞாபிக்க, அதன்படி கொடிக்கவி பாடி ஏற்றிவித்தார்.

முருகனுக்குச் சேவல் கொடி இருக்கிறது; அதன் தத்துவம் சேவல் விடிந்ததும் கொக்கரிக்கும். அதுமாதிரி இருள் என்ற அஞ்ஞானம் நீங்கி வெளிச்சம் என்ற ஞானம் உண்டாகும் உட்கருத்தை விளக்குகிறது. இவைகளைப் பற்றிப் பேசப்புகுந்தால் அது விரிவடையும்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்ருல் நம்நாட்டில் கொடியேற்றுவது என்பது பண்டைநாள்தொட்டு இருந்து வருகிறது என்பது புலனுகிறது.

இனி, பண்டைக்காலத்து அரசர்களுக்கும் கொடி இருந் திருக்கின்றன. ஒரு நாட்டுக்கு அரசன் என்று இருந்தால் அதனை விளக்க ஒரு கொடி அவசியம். இன்ன நாட்டைச் சேர்ந்தவன் என்பதைக் கொடி குறிக்கும். போர்க்காலத் திலும் கொடியை முன்வைத்தே சண்டைசெய்வார்கள். வெற்றிகண்டதும் கொடியை வானளாவ ஏற்றிக் கொண்டாடு வார்கள். மணிவாசகர் திருத்தசாங்கம் என்றபகுதியில் அரசர் ஒருவருக்கு இருக்கவேண்டிய 10 அம்சங்களைக் குறிப்பிடு கின்ருர். அவையாவன:- பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, வாகனம், படை, பறை, மாலை, கொடி. கொடியைக் குறிப்பிடும் செய்யுள்: 10 வது.

"சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூருய்—சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல் விளங்கி யேர்காட்டும்
கோதிலா ஏருங் கொடி."

இவற்றையெல்லாம் அனுசரித்தே ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு கொடி இருந்துவந்திருக்கிறது. சேரனுக்கு

விற்கொடியும், சோழனுக்குப் புலிக்கொடியும், பாண்டியனுக்கு மீனக்கொடியும் இருந்தது. இம்மாதிரி எல்லா அரசர்களுக்கும் தனித்தனி கொடி இருந்திருக்கின்றது. இந்த அடிப்படையில் பார்த்தால் நமது சுதந்திர இந்திய நாட்டிற்கும் ஒரு கொடி அவசியம் என்பது புலனுகிறது. இப்போது நமது தேசியக்கொடியைப்பற்றிச் சிந்திப்போம். முதன்முதல் நம்நாட்டில் 1906ம் ஆண்டில் காமா அம்மையாரால் மூன்று நிறக் கொடி காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு உண்டாக்கப்பட்டது. 1916ம் ஆண்டில் டாக்டர் அன்னிபெசண்டு அம்மையார் ஷ கொடியில் சிறிது மாறுதல் ஏற்படுத்தினுர். 1921ல் மகாத்மாகாந்தியடிகள் சிறிது மாறுதல் ஏற்படுத்தினுர். பின்னர் 1931ல் மாறுதல் ஏற்பட்டது. அதாவது மேல் பட்டை காவி நிறமாகவும் நடுப்பட்டை வெண்ணிறமாகவும், கீழ்ப்பட்டை பசுமை நிறமாகவும் வெள்ளை நிறத்தில் ராட்டினமும் இருந்தது. 1947 ஆகஸ்டு 15ல் நம் நாடு சுதந்திரமடைந்தபோது ஷ கொடியைத் தேசியக் கொடியாக மாற்ற ராட்டினத்தை மாற்றி அசோக சக்கரம் பொறிக்கப்பட்டது. காவிநிறம்: தைரியத்தையும், தியாகத்தையும், வெண்மை: உண்மையையும், அமைதியையும், பசுமை: அன்பையும் ஆற்றலையும், அசோகசக்கிரம்: நீதியையும் குறிக்கும்.

கொடிக்குப் பெருமை செய்தால் நாட்டுக்கும் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட மக்களுக்கும், பெருமைசெய்தவராவோம். கொடிக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் மக்களுக்கு வந்ததாகவே பாவித்து அதை நீக்கப் போராடுவது வழக்கம். ஆகையால் இத்தகைய சிறப்புவாய்ந்த தேசியக்கொடியை நாம் ஒவ்வொரு விழாவிலும் ஏற்றி வணக்கம் செய்யவேண்டியது நமது கடமையாகும். கவி சுப்ரமணிய பாரதியார் பாடியுள்ள தேசியப்பாடல்களிலிருந்து இக்கொடியின் தத்துவம் பாதுகாக்கவேண்டிய கடமை முதலியவைகள் நன்கு விளங்கும். வாழ்க தேசியக்கொடி! வாழ்க நம்நாடு!!

---

தருமபுர ஆதீன ஸ்தாபகர்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைவிழா

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

"பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் உயிர்கள்மீது வைத்த எல்லையில்லாப் பெருங்கருணையினாலே குரு, இலிங்க, சங்கமத் திருவுருவங்கள்கொண்டு உயிர்களின் போக்குக்கேற்ப மானைக்காட்டி மானைப்பிடித்தல் போலவும் மீனைக்காட்டி மீனைப்பிடித்தல் போலவும் அவ்வவர்வழிச் சென்று தன்வயப்படுத்தி அருளுவன்" இது சாத்திர நூலோரின் பொதுமுடிபு. "துன்னிய ஐம்புலவேடர் சுழலில் பட்டுத் துணைவனையும் அறியாது துயருறும் தொல்லுயிரை மன்னும் அருட்குருவாகி வந்து மலமகற்றித் தானாக்கி மலரடிக்கீழ் வைப்பான்" என்பது சிவஞானசித்தியார். அம்முறையில் சந்தானாசாரியர் மரபிலே தென்னாட்டில் ஒரு ஞானானுபூதிச் செல்வர் சிவானுபூதி நிலையினை நாட்டிலே நிலைபெறச்செய்து தம்மொடு சைவம் தரணிதனில் தழைத்தோங்கச் செய்கிறார் என்பது ஏன்? 300 ஆண்டுகளாகத் தமிழகத்திற்குத் தெரியும். அந்தப் பெரியவர்கள்தான் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவர்களுடைய இலக்ஷியத்தை இன்றும் நிறைவேற்றிவரும் ஸ்தாபனந்தான் தருமபுர ஆதீனம்.

## ஆண்டுக்கொருமுறை

பெரியவர்களுடைய நடைமுறைகளை-உபதேசமொழிகளை நாள்முழுதும் பின்பற்றிவருகின்றோம்; என்றாலும் சிறப்பாக நினைத்தற்குரிய வாய்ப்பை உண்டுபண்ணுகின்றன. அவர்களுக்குரிய திருவிழா நாட்கள். ஆண்டுக்கொருமுறை ஆதீன ஸ்தாபகர் குருபூசை விழா நடைபெறும். ஒருநாள் நிகழ்ந்த

காட்சிகள் ஓராண்டளவு நம்மனத்தில் நிலைத்து நிற்கும் அத்தகைய தெய்வீகக் காட்சிகள் அவை.

அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு 23—5—54 ஞாயிற்றுக் கிழமை எல்லோருக்கும் கிடைத்தது.

## பிர்மோற்சவம்

மேலக்கோயில் என்னும் ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் திருக்கோயிலில் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரஸ்வாமிக்கு மகோத்ஸவம் 14—5—54 முதல் 23—5—54 முடிய பத்துநாட்களிலும் சிறப்பாக நடைபெற்றது. ஆலயங்களுக்கு வருவோர் உண்மையான உபதேச வார்த்தைகளையும் கேட்க விரும்புவார்கள் அல்லவா? அதற்காக மாலையில் திருவிழா நாட்களில் சொற்பொழிவுகள் அமைக்கப் பெற்றிருந்தன. 'திருநெறிய தெய்வத் தமிழின் பெயரால் மாநாடு அமைக்கப்பெற்றது.

## ஆதீன மடாலய முகப்பு

மடத்தின் முகப்புக் கொட்டகை தருமபுரத்திற்குத் தனி அழகைத் தருவது. இதுவரை கொட்டகை கீற்றுக்களால் வேயப்பெற்றிருந்தது. மடாலய முகப்புப் பந்தலின் அவசியத்தை நன்குணர்ந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெரும் பொருட்செலவில் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்ஸினால் மூடப் பெற்ற இரும்புக் கோட்டையாக எழுப்பியருளினார்கள். அதுவும் குருபூசை விழாவினை ஒட்டித்தான் வேலை தொடங்கியது. விரைவில் இடைவிடாத உழைப்பினால் மாநாட்டின் தொடக்கத்திற்குள் கொட்டகை வேலை பூர்த்தியாகிவிட்டது. 'அண்மையில் எங்கும் இத்தகையதொரு அரங்கமைப்பைக் காணுதல் அரிது' இது கொட்டகையைக்கண்டு திரும்பும் ஒவ்வொருவரது உரையிலும் வெளிவந்த சொற்கள்.

5509



## திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

தமிழ், தெய்வத் தமிழ் திருநெறிய தெய்வத் தமிழ் இத்தனை அடைமொழி அமைப்புக்கள் அமைந்த இந்தப் பெயர் காழிக்கவுணியர் பெருந்தகை திருஞானசம்பந்தப் பெருமான் அளித்த திருநாமம். அத்தகைய பெயரமைப்பு மாநாட்டின் பெயராக அமைந்ததை அறிஞர் எல்லோரும் பாராட்டுவர். ஏழு எட்டு மாநாடுகள் இந்தப் பெயரால் நடைபெற்றுள்ளன. 14—5—54 அன்று மாநாடு தொடங்கிற்று.

## முதல்நாள்

14—5—54 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி. தஞ்சை அரண்மனை சீனியர் பிரின்ஸ் ஸ்ரீ ராஜாஸ்ரீ ராஜாராம் சாகேப் சத்திரபதி அவர்கள் விழாத் தலைவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் வித்துவான் திரு. G. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 'திருநெறிய தமிழ்' என்ற தலைப்பில் 'தொண்டர் நாதனைத் தூது செலுத்தியது தமிழ்; எலும்பைப் பெண்ணாக்கியது தமிழ்; கடலில் கல்மிதக்கச் செய்தது தமிழ்; இந்தத் தமிழ்தான் திருநெறிய தெய்வத்தமிழ் என்பனபோன்ற கருத்துக்களினால் உரையாலும் பாட்டாலும் பேசி மகிழ்வித்தார்கள். அடுத்து சென்னை, திருமதி குகப்பிரியை அம்மையாரவர்கள் 'அப்பர் தேவாரம்' பற்றிப்பேசுகையில் சிற்றம்பலம் மேவிய செல்வன் கழலேத்தும் செல்வம்தான் செல்வம்' என்றும் இத்தகைய ஒரு செல்வம் பெற்றமையால்தான் அப்பர் திருப்புகலூரில் பொய்ச்செல்வங்களாகிய பொன்னையும் மணியையும் வாரி அகழியில் எறிந்தார் என்றும் குறிப்பிட்டு தேவாரக்கருத்துக்கள் பலவற்றைத்தெளிய உரைத்தார்கள். பின்னர், திருவாரூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள், 'நயத்துக்குச்சுந்தரனார்' என்ற தலைப்பில் சுந்தரர் தம்சொன்னயங்களை எடுத்துக் கூறி மகிழ்வித்தார்கள். திருக்கடவூர் ஸ்ரீ அமுதகடேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்

கட்டளை விசாரணை ஸ்ரீமத் சாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் 'சிவபோகசாரம்' என்ற ஆதீன பண்டார சாத்திரங்களுள் ஒன்முன குருஞானசம்பந்தர் அருளிய நூலில் உள்ள நுண் கருத்துக்களைக்கூறிக் களிப்பூட்டிஞர்கள்.

இரவு 9 மணிக்கு ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், சொ. சிங்காரவேலன் எழுதிய 'மங்கையர்க்கரசி' என்ற நாடகம் ஆதீனக் கல்விநிலைய மாணவர்களால் நடைபெற்றது.

## இரண்டாம்நாள்

15—5—54 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மாநாடு தொடங்கியது. தலைவர், திருச்சிராப்பள்ளி, திரு. T. M. நாராயணசாமி பிள்ளை அவர்கள் M. A. B. L, M. L. C. சென்னை, பல்கலைச் செல்வர் திரு. T. P. மீனுட்சிசுந்தரஞர் அவர்கள் M. A. B. L., M. O. L. 'திருவிளையாடல்' என்ற தலைப்பில் அறுபத்துநான்கு திருவிளையாடல்களின் நுண் கருத்துக்களை விளக்கிப் பேசிஞர்கள். 'புராணங்கள் வரலாற்றினையும் கூறுகின்றன, நாட்டு வரலாறு மட்டுமல்ல மொழிவரலாறும் திருவிளையாடலில் பேசப்பெறுகிறது. இறைவன் ஆறறிவுபடைத்த மனிதனுக்கு மட்டுமல்ல ஏனைய ஜீவராசிகளிடத்தும் கருணை காட்டுகிருன் என்பதை திருவிளையாடல் கூறுகிறது. கரிக்குருவி நாரை இவைகள் முத்திபெற்றன. பன்றிக்குட்டிக்குப் பாலளித்தது போன்றன இதனைமெய்ப்பிக்கும் என்று பேசிஞர்கள். அடுத்து. சென்னை எத்திராஜுலு, பெண்கள் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திருமதி. A. R. இந்திரா அவர்கள் 'கலங்கரைவிளக்கு' என்னும் தலைப்பை எடுத்துக்கொண்டு இயற்கை வளர்ச்சி இறை மணத்தை நினைவூட்டுவதென்றும் எங்கெல்லாம் மனத்தை வசப்படுத்தும் வன்மை இருக்கிறதோ அங்கெல்லாம் இறைமை இருக்கிறது என்றும் வாழ்க்கைப் பயணத்தில் உடல் தோணியில் உயிர் யாத்திரை போகும்போது திக்குத் திசைதெரியாமல் தடுமாறும்பொழுது கலங்கரை விளக்குப் போல கடவுள் திருவடி காட்சிதருகிறதென்றும், ஆதீனமே

ஒரு கலங்கரை விளக்கு என்றும் அப்பர் சுவாமிகளின் திருநேரிசையை ஆதாரமாகவைத்துப் பேசினார்கள். வழக்கம் போல் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

ஆதீனப்பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதிய "வென்றது யார்?" என்ற நாடகமும், ஆதீன ஓரியண்டல் மிடில்ஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தம் அவர்கள் எழுதிய "விடுதலை" நாடகமுமாகிய இரு சிறு நாடகங்கள் ஆதீனக் கல்விநிலைய மாணவர்களால் உணர்ச்சி ததும்ப நடித்துக்காட்டப்பெற்றன.

## மூன்றாம்நாள்

16—5—54 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு மாநாட்டின் மூன்றாம் நாள் நிகழ்ச்சி தொடங்கியது. சென்னை முன்னாள் அமைச்சர் திரு. N. வேங்கடசாமி நாயுடு B.A.B.L. அவர்கள் தலைமைவகித்தார்கள். பக்தி வித்தாலேயே உலகம் பரிபாலிக்கப் படுகிறது. பக்தி விதையைப் பாதுகாத்து வைக்கப்பெற்ற இடங்கள் மடங்கள். இந்தமடத்தார் பக்தியை வளர்ப்பதற்காக எத்தனையோ அருமையான காரியங்களைச் செய்துவருகின்றார்கள். சென்னையில் பிரசார நிலையம்வைத்து வாராவாரம் பக்த்திப்பிரவசனங்களைச்செய்து வருகின்றார்கள், இங்கே நடைபெற்று வருகிறகோடை வகுப்பையும் பார்த்தேன் இங்கேபடிக்கிற ஒவ்வொருவரும் அங்கங்கேசென்று ஆயிரம் பேர்களைப் பக்தியில் ஈடுபடுத்தப் போகிறார்கள். நல்ல தக்கவர்களைக்கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. நேரில் பார்த்தேன். ரொம்ப சந்தோஷமாக இருந்தது, திருமலைத் திருப்பதியிலும் இம்மாதிரி ஒரு வகுப்பு நடைபெற்று வருகிறது. அதனால் ஏற்பட்டபலன் ஜாஸ்தி. இங்கேயும் இம்மாதிரி வகுப்பு வைத்திருப்பதும் நான் எண்ணிய காரியங்கள் எல்லாவற்றையும் அப்படியே செய்கையில் எல்லோரையும் அதிசயிக்கும்படியாகச் செய்து

விடுவதும் இந்த ஆதீனத்து மகாசந்நிதானம் அவர்கள் வழக்க மாய்விட்டது. இம்மாதிரி பரபரப்போடு எல்லாரும் செய்தால் பக்திப் பயிர் விளையாமல்போகுமா? என்று பேசினுர்கள்.

சென்னை பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் சொல்லின் செல்வர், திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள் கம்பர் கண்ட அரசியலிலே அயோத்தியில் ஆண்ட நல்லாட்சியையும் இலங்கையில் விளங்கிய அல்லாட்சியையும் எஃகுத்தண்டம்போல எதனையும் குறிக்கோளில் வைத்துக்காட்டிய சுக்ரீவ ஆட்சியையும், எடுப்பார்கைப் பாலகன்போல இருந்த பிற ஆட்சிகளையும் எடுத்துக்கொண்டு கம்பர் கவிச்சுவை அமுதை ஊட்டினுர்கள். சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் T. M. P. மகாதேவன் அவர்கள் உபநிஷத அமைப்பையும் அதன் பகுப்பையும் அவைதான் சிறந்த ஞான சாதனங்கள் என்பதையும் அவற்றில் கூறப்பெறும் வரலாற்று நுணுக்கங்களைப்பற்றியும் விரிவாகவும் அழகாகவும் பேசினுர். அடுத்து கந்தபுராணக் கவிநலங் காட்டவந்த திருவாவடுதுறை ஆதீன வித்துவான் சித்தாந்த சைவமணி திரு. த. ச. மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சிறந்த கவிதைகளை எடுத்துக் கொண்டு நயம் விளங்க நல்லுரை பகர்ந்தார்கள். அடுத்து மாயூரம் குமரக்கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தக்ஷிணுமூர்த்தி திருவருட்பாவைப்பற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துப் பேசினுர்கள்.

இரவு 9 மணிக்கு சென்னை ஆதீன சமயப்பிரசார நிலையத் திருமுறை ஆசிரியர், திரு. P. சுவாமிநாதன் அவர்கள் எழுதிய 'திருஞானசம்பந்தர்' என்ற நாடகம் சென்னை சமயப் பிரசார வகுப்பு மாணவியர்களால் நடித்துக் காட்டப்பெற்றது.

நான்காம்நாள்

17–5–54 நான்காந்திருநாள் விழா. குடந்தை சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் சிவசேனுபதி திரு. P. T. குமரசாமிச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னை

விவேகாநந்தா கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் திரு. ஜகநாதாசாரியார் அவர்கள் திருவாய்மொழியின் தத்துவார்த்தங்களையும், வியாக்கியாதாக்களின் அருமைப் பாட்டினையும் எடுத்து விளக்கிப் பேசினர். சென்னை மினர்வா கல்லூரிப் பிரின்ஸிபால் திரு A. N. பரசுராமன் அவர்கள் 'திருப்பாவை திருவெம்பாவை இராசக் கிரீடைகளைப்பற்றி சங்க இலக்கிய காலம் முதல் காத்தியாயனி விரதமாக தமிழ்நாட்டிலும் மலையாளத்திலும் வெளிநாடுகளிலும் நடைபெறுவதை விளக்கிப் பல மேற்கோள்களுடன் பேசினர்கள். பெங்களூர் செண்டரல் காலேஜ் பேராசிரியர் திரு. ருத்ரபதி அவர்கள் திருவாசகம் அநுபவத் திருநூல் என்பதை ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டினர். குறுக்கை கட்டளை விசாரணை முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் 'சொக்கநாத வெண்பா வைப்பற்றிப் பேசக் கூட்டம் இனிது முடிந்தது.

பின்னர் சென்னை தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத் திருமுறை ஆசிரியர் சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் பார்ட்டியாரால் இசைநிகழ்ச்சி நடைபெற்றது.

## ஐந்தாந் திருநாள்

18—5—54 மாலை 6 மணிக்கு ஈரோடு நகராண்மைக் கழகத் தலைவர் திரு. மீனுட்சிசுந்தர முதலியார் அவர்கள். உலக வாழ்வுக்குப் பயன்படாத எதையும் இன்றைய உலகம் ஒத்துக்கொள்ளாது. இன்றையுலகம் ஏற்கும்வகையில் விஞ்ஞானத்தின் வாயிலாக மெய்ஞ்ஞானத்தை விளக்குதலும் அறிந்தமைந்த உலகத்தை மெய்ஞ்ஞான நெறியிலேயே வாழவைத்தலும் எல்லாரும் செய்யவேண்டிய கடமை என்பதனை பல மேற்கோள்களோடும் படக் காட்சிகளுடனும் எல்லாரும் வியக்க விரிவுரையாற்றினர். ஆதீனக் கல்லூரித் துணைத் தலைவர் வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'அரசியலும் சமயமும்' என்ற தலைப்பில் அரசியலும் சமய தத்துவமும் ஒன்று என்பதை ஒரு பத்து நிமிஷங்கள் எடுத்துக் காட்டினர். செட்டிநாடு ஆசிரியர் பாலகவி, திரு. வே. இராமநாதன் செட்டியார் தசகாரிய அகவலைப்பற்றியும் சீகாழி

குருபூஜைத் திருநாளில்



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச சுவாமிகள் ஆலயதரிசனம் செய்து எழுந்தருளிவரும் காட்சி.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டில்,




பெருமக்கள் கூட்டம்

குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள்



சமய வகுப்பு பயிற்சியாளர்களுக்கு அருளுரை வழங்குகிறார்கள்.



கோடைகால சமயவகுப்புப் பயிற்சியாளர்கள்

கட்டளைவிசாரணை வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகளவர்கள் ஞானப்பிரகாசமாலை பற்றியும் விளங்க விரித்துரைத்தார்கள். இரவு 8 மணிக்கு ஆதீன சென்னை சமயப்பிரசார நிலையத் திருமுறை ஆசிரியர், திரு. P. சுவாமிநாதன் அவர்கள் எழுதிய 'குருஞானசம்பந்தர்' நாடகம் சென்னை சமயப் பிரசார நிலைய மாணவியர்களால் நடத்தப்பெற்றது.

## ஆறுந்திருநாள்

19—5—54 புதன்கிழமை மாலை 6 மணிக்கு இந்து, துணையாசிரியர் திரு. N. ரகுநாதய்யர் அவர்கள் B. A., தலைமையில் மாநாடு நடைபெற்றது. சங்க இலக்கியத்தில் காணும் சமயக் கருத்துக்களை சென்னை கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகநாதன் அவர்கள் M. A., பேசினார்கள். தொண்டர்தம் பெருமையைத் தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவர் வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள் பேசினார்கள். திருக்குறளும் திருத்தொண்டரும் என்பதுபற்றி பெருஞ்சொல் விளக்கனார் திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள் மெய்ப்பொருள்நாயனார் முதலியோர் வாழ்வு திருக்குறளின் அடிப்படையை ஒட்டியிருப்பதைக் குறித்து அழகுறப்பேசி மகிழ்வித்தார். வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் முத்துக்குமாரசாமித் திருவருட்பா, பற்றிப் பேசக் கூட்டம் முடிவுற்றது. இரவு 9 மணிக்கு ஆதீனக்கல்விநிலைய மாணவர்களால் வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் எழுதிய பரஞ்சோதி என்ற நாடகம் நடைபெற்றது.

## ஏழாந்திருநாள்

20—5—54 வியாழன் மாலை 6 மணிக்கு மாநாடு தொடங்கியது. தலைவர் கோவை திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L., பேசுகையில் தருமபுரம் ஆதீன மடாலயம் தமிழிற்கும் சைவத்திற்கும் தமிழகத்திற்கும்

பெரும் பணியாற்றி வருகிறது. பழங்காலக் கோவில்களைப் பாதுகாக்கும் அறப்பணிகளையும் இலக்கிய வளர்ச்சிக்குரிய கல்லூரிகளையும் அமைத்திருக்கிறது எனப் பாராட்டிப் பேசினர்.

சேக்கிழார் கண்ட அரசியலை விளக்கி சென்னை பாரத தேவி துணையாசிரியர் திரு. K. சோமசுந்தரம் அவர்கள் பேசினர். அன்னர் பேசுகையில் பழங்காலத்தில் மன்னர்கள் நாட்டிற்கு உயிராக விளங்கினர். மன்னன் ஆட்சியில் தவறு ஏற்படில் மழையில்லை. சேக்கிழார் காலத்து சோழமன்னர் மக்கள் நலனையே தங்கள் நலனுகக்கருதி வாழ்ந்தனர். அமைதி ஆனந்தம் இவை நாட்டில் குடிகொண்டன. 'மாநிலம் காவலன் என்பான் மன்னுயிர் காக்குங்காலை' என்றபாடலில் அரசியல் முறைகளை அறிவுறுத்துகிருர் சேக்கிழார் என்றும் மற்றும் மூர்த்திநாயனுர் நமிநந்தி அடிகள் முதலியோர்களை எடுத்துக் காட்டியும் இனிதுற மொழிந்தமர்ந்தனர். அடுத்து குடந்தை நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளித் தலைமை யாசிரியர் திரு. சுந்தரேசஞ் செட்டியார் அவர்கள் விறன் மிண்டர் பழுத்த மனத்தொண்டர் என்றும் விறன்மிண்டர் வரலாறு குருலிங்க சங்கம பத்தியில் அடியார் பக்தியே சிறந்தது என்பதைக் காட்டுவதாகும் என்றும் பேசினுர்கள். திருநள்ளாறு கட்டளை விசாரணை ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'கிளிவிடு தூது'பற்றிப் பேச விழா இனிது முடிந்தது. பின்னர் சூரிய நமஸ்காரம் செய்யும் முறைகளை ஆசனங்கள் மூலம் திரு. திருவேதி அவர்கள் செய்து காண்பித்தார். இரவு 9 மணிக்கு வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் எழுதிய 'மதுரக்கனி' என்ற நாடகம் ஆதீனக் கல்வி நிலைய மாணவர்களால் நடிக்கப் பெற்றது.

## எட்டாந்திருநாள்

21—5—51 வெள்ளிக்கிழமை. இன்றைய மாநாட்டின் தலைவர், சென்னை சட்டசபைத்தலைவர் ஸ்ரீ ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள். தலைவர் அவர்கள் தன் முன்னுரையில்

ஆதீனம் செய்துவரும் சேவைகளைப் பாராட்டினர். பாமர மக்களிடம் பிரசாரம் இன்று அவசியமாயிருக்கிறது. ஆதீனங்களின் பணி மகத்தானது. அநாதைக் குழந்தைகளை ஆதரிப்பது பெரும் புண்ணியம். குழந்தைகளிடத்திலே மதபேதம் தோன்ருமல் இருக்கவேண்டும். சாதி வித்தியாசம் ஒழிய வேண்டும் என்று குறிப்பிட்டுப் பேசினர்கள். சென்னை மாம்பாக்கம் குருகுலம் திரு. இளவழகனர் அவர்கள் திருமூலரும் திருமந்திரமும் என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தார்கள். ஆண்டுக்கொருமுறை குருவழிபாடு செய்து அருள்நெறி வளர்ப்பது நல்லது. அருளாசிரியன் வழிநிற்பதே முறை. 'திருவள்ளுவரையும் திருமூலரையும் இணைத்துப் பார்க்கும் தலைப்புக் கொடுத்தவர்களுக்குஎன் நன்றி. திருவள்ளுவரும் திருமூலரும் பெரும்பாலும் ஒத்தகருத்துடையவர்கள். அறமும்பொருளும் இன்பமும் மூன்றும் திருக்குறள் போதிக்கும். மறைமுகமாக வீட்டு நெறி விரவிக்கிடக்கும் வகையில் வள்ளுவர் திருக்குறளை அமைத்தார். திருமூலரோ வீட்டுநெறிக்குத் தனித்தகுதி கொடுத்துப் போற்றியுள்ளார். வள்ளுவர் கடவுளைப் பொது வகையில் போற்றினர். திருமூலர் சிறப்புவகையில் பெயர் குறித்தே பேசுகிருர். வகுத்தும் தொகுத்தும் பேசுதல் இருவருக்கும் ஒத்த இயல்பு. 'பிறவிப்பெருங்கடல்' என்பன போன்ற திருக்குறள் அப்படியே திருமந்திரத்தில் அமைந்துள்ளது. திருமந்திரத்தில் 13 அதிகாரங்களுக்கு மேற்பட்ட பெயர்கள் இரண்டிடத்தும் காணப்படுகின்றன என்றும்கூறி முடித்தார். அடுத்து தஞ்சை ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீஸர் திரு. T. M. பாஸ்கரத் தொண்டமான் அவர்கள் கற்சிலையும் கற்பனையும் என்ற தலைப்பில் பேசுகையில் சிந்திக்கத்தெரியாதவன் மனிதனல்ல. வாழத் தகுதியற்றவன் அவன். சிந்தனையில் நிகழ்வதே கற்பனை. கற்பனைத்தேர் ஏறிச் செல்பவன் கவிஞன் என்றும் சிலையிலே சிந்தனையை உருவாக்கும்சிற்பி, கவிஞன்காதலன் இவர்களது இதயஇணைப்புக்களை விவரித்துப் பேசினர். அடுத்து சென்னை ஆனந்தவிகடன் துணையாசிரியர் திரு. பி. ஸ்ரீ. ஆசார்யா அவர்கள் நல்ல வண்ணம் வாழலாம் என்பதுபற்றிப் பேசினர். அடுத்து

தொண்டன் ஆசிரியர் திரு. K. ஆறுமுகநாவலர் அவர்கள் 'நன்னெறி காத்தநாதனுர்' என்ற தலைப்பில் மெய்ப்பொருள் நாயனுர் வரலாற்றினை அழகுறப்பேசி சபையோரை ஆனந்தத்தில் ஆழ்த்தினர்.

இரவு 9-மணிக்கு தருமபுர ஆதீனப் பல்கலைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள் எழுதிய "திலகவதி" என்ற நாடகம் கல்லூரி மாணவர்களால் உணர்ச்சி ததும்ப நடிக்கப்பெற்றது. நாடகத்திற்கு தலைமைவகித்துப் பேசிய திருமதி புஷ்பம் நடராஜன் அவர்கள் ஆதீனத்தில் சொற்பொழிவுகள் வாயிலாகவும், நாடகக்காட்சி மூலமாகவும், சமயக் கொள்கைகளைப் பரப்பி வருவதைப் பாராட்டியும், மாணவர்கள் திறமையையும் நாடக அமைப்பாளர்களையும் பாராட்டிப் பேசினுர்கள். இன்றைய விழா இத்துடன் இனிதுமுடிந்தது.

## ஒன்பதாந்திருநாள்

22—5—54 சனிக்கிழமை தலைவர்: சென்னை ட்ரிப்யூனல் கோர்ட் ஜட்ஜ், திரு. நடராச நாடார் அவர்கள். ஆதீனப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் வரவேற்புரை கூறினுர்கள். தலைவர் தம் முன்னுரையில் கடவுட்கொள்கை நாட்டிலே நலிந்து வருவதையும் அத்தகைய சந்தர்ப்பத்தில் இம்மாதிரி மாநாடுகள் கூடவேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தினுர். அடுத்து, சென்னை சைவசித்தாந்த சமாஜம் செயலர் திரு. ச. சிவகுமாரன் அவர்கள் M. A., "கம்பர்கண்ட இலக்கியம்" என்ற தலைப்பில் இராமாயணத்தில் வரும் துண்டு நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறிப் பேசினுர். அடுத்து, சென்னை ஜெயின் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. S. V. வரதராச ஐயங்கார் அவர்கள், சைவவைணவ ஒற்றுமையையும், திருமதி, பாப்பாத்தி அம்மாள் அவர்கள் ஞானத்தின் திருவுரு என்பதைப்பற்றியும், நாகை நேஷனல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. மூ. சண்முகதேசிகர் அவர்கள்

'இறைவாத இன்ப அன்பு' என்பதுபற்றியும் பேசினார்கள். பின்னர், சென்னை தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத் தலைவர் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் பண்டாரமும்மணிக்கோவையைப் பற்றிப் பேசினார்கள். இலக்கியம், சமயம் இவை இணைந்திருந்தது இவர்கள் பேச்சில். இரவு 8-மணிக்கு திருப்பனந்தாள் செந் தமிழ்க்கல்லூரி வீணையாசிரியர் திரு. R. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்களின் வீணைவிருந்து நடைபெற்று விழா முடிவுற்றது.

## பத்தாந்திருநாள்

23—5—54 ஞாயிற்றுக்கிழமைகாலை 9மணிக்கு மாநாடு தொடங்கிற்று. இன்று குருபூசைத்திருநாள் திருப்பனந்தாள் காசிமடம் இளவரசு ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமி களவர்கள் இன்றைய மாநாட்டிற்குச் சிறப்புத்தலைவராக எழுந்தருளினார்கள். வித்துவான், திரு.ச. தண்டபாணிதேசிகர் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களைத் தலைமை தாங்கிச் சிறப்பிக்க கேட்டுக்கொண்டு குருபூசையின் தத்துவத்தை விரித்துப்பேசினார். பின்னர் சுவாமிகளவர்கள் தலைமையுரை யில் குருவழிபாட்டின் அவசியத்தைப்பற்றிப் பேசினார்கள். திருவாவடுதுறை ஆதீனவித்துவான் சித்தாந்தச்சொல்மணி. குலசை, திரு. வீர. சிவசுப்பிரமணியம் அவர்களின் விரிவுரை தொடர்ந்து நடைபெற்றது.

ஆதீனப்பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "பழம் பாடல்" என்பதுபற்றிப் பேசுகையில் தருமையாதீனத்து முனிவர்குமரகுருபரர்பாடிய அங்கயற்கண்ணியம்மைபிள்ளைத் தமிழில் "பழம்பாடல்" என்று மூன்றிடத்தில் குறித்தருளி னார். அப்பாடல் எது? நான்மறையோ? தமிழ்மறையோ? நான்மறையாயின் அது தொடுத்ததன்று, இறைவன் திரு வாக்கு. சங்கற்பசிருட்டியாக நின்றாங்கு ஆக்கப்பட்ட நிலை யினது. தமிழ்மறையோ தொடுக்கப்பட்ட நிலையுடையது

அதனால் தொடுக்கும் பாடல் ஆயிற்று. கடவுட்பாடல்: பழம்பாடல் தொடுக்குங் கடவுட்பழம்பாடல். தொடுக்குந் தொடை பாடற்றொடை. 'ஞானப்பாடற்றொடையருச் செவ்வாய்'. தொடுக்குங் கடவுட் பழம்பாடற்றொடையால் உயிர்க்கு எய்தும் புயன் சிவஞானம். அது திருவருள். அத் திருவருளே அங்கயற்கண்ணியம்மை, அம்மையே இவ்வாறு உணர்த்திய திறம் அடிகளார்க்கே சிறப்பாயுரியது என்று குறிப்பிட்டார்கள். காலை 11-மணிக்கு மாநாடு இனிது நிறை வெய்தியது. சென்னை சமயப்பிரசாரநிலையத் தலைவர் வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாநாட் டின் ஒவ்வொருநாள் தொடக்கத்திலும் இறுதியிலும் வர வேற்புரையும் நன்றியுரையும் கூறியருளினார்கள். எல்லோரும் ஸ்ரீசொக்கலிங்கப்பெருமான் பூசைக்குப் புறப்பட்டனர். காலை 10-மணிமுதல் பெருமானுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. நாதசுரக்கச்சேரிகள் 9-மணி முதல் தொடர்ந்து நடைபெற்றது. நடுப்பகல் 12-மணிக்கு பூஜை முடிந்தது. இரண்டாம் திருமுறை திருஞானசம்பந்தர் தேவாரம் குறிப்புரையுடன் கூடிய வெளியீடும் விழாமலராக வெளியிடப்பெற்று அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

காசிமடம் இளவரசு, வித்துவான், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வழிபாடாற்றிக் குருதரிசனம் செய்தருளினார்கள்.

1-மணிக்கு மாகேஸ்வரபூசை சிறப்பாக நடைபெற்றது. ஏழைமக்களுக்கு உணவளிக்கப்பெற்றது.

## சமய பாட வகுப்பு

நாடு தற்போதுள்ள நிலையில் சமய வகுப்புக்கள் பள்ளி களில் நடைபெறுவது இன்றியமையாதது. அதற்கு ஆசிரியர் கள் நல்ல பயிற்சி உடையவர்களாயிருத்தல் அவசியமெனக் கருதி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஒரு புதுமாதிரியான சமய பாட வகுப்பு ஒன்றை ஆரம்பித்துவைத்தார்கள். அதுவும் குருபூசை விழாவினை ஒட்டி நடைபெற்றது.

ஆசிரியர்கள், ஆலய நிர்வாகிகள், அர்ச்சகர்கள் இவர்கள் இவ்வகுப்பில் சேர்தற்குரியர். வேதம், உபநிஷதம், ஆகமம், சைவசித்தாந்தம், அத்வைதம், வைணவசித்தாந்தம், மாத்வ சித்தாந்தம், இதிகாசம், புராணங்கள், கல்வெட்டுக்கள், இதர மதங்கள், மடாலயங்களின் வரலாறுகள், தேவஸ்தானங்கள் முதலியவற்றைப்பற்றி அவ்வத்துறையில் சிறந்தவர்களைக் கொண்டு பாடம் நடத்தப்பெற்று தகுதித்தாள்களும் வழங் கப்பெற்றன.

## பட்டினப்பிரவேசம்

24—5—54 திங்கட்கிழமை பட்டினப்பிரவேசத்திருநாள். காலையில் புலவர் அரங்கம் நடைபெற்றது. வந்திருந்த புலவர் பெருமக்கள் பேசிச் சிறப்பித்தனர். நடுப்பகலில் ஸ்ரீ சொக்க லிங்கப் பெருமானுக்கு விசேஷ பூசை நடைபெற்றது. பகல் 12-மணிக்கு மாகேஸ்வரபூசை சிறப்பாக நடைபெற்றது. மாலை 4-மணிக்குப் புலவர் அரங்கம் தொடங்கியது. வந்திருந்த புலவர் பெருமக்கள் சொற்பொழிவாற்றினர். மாலை 6-மணிக்கு தருமபுர ஆதீன இசைப்புலவர், திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் பார்ட்டியாரால் இன்னிசை விருந்தளிக்கப் பெற்றது.

தருமபுரத்தில் முகப்புப்பந்தல் அலங்காரக் காட்சிகள் கண்டவர் கண்ணையும் கருத்தையும் விட்டகலா.

இரவு 10-மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பட்டினப்பிரவேசத்திற்கு எழுந்தருளினார்கள். ஆயிரமாயிரம் மக்கள் மத்தியிலே சிவிகை மிதந்தது. நான்கு வீதிகளிலும் நாதசுரக்கச்சேரிகள், வாணவேடிக்கைகள் முதலியன சிறப் பாக நடைபெற்றன. இரவு மூன்றுமணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கொலுக்காட்சி வழங்கியருளினார்கள்.

522

# வேதாகம சைவசித்தாந்த சமயபோதம்
# கோடைக்காலப் பயிற்சி வகுப்பு

### பாடக் குறிப்புகள்

ஆசிரியர், புலவர், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள்
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக்கல்லூரி, தருமபுரம்

(சென்றமாதத் தொடர்ச்சி)

**சித்தாந்தம் :**

கல்லானிழன்மலை - வில்லாரருளிய
பொல்லாரிணைமலர் - நல்லார் புனைவரே.

கல்ஆல் - அருள் வடிவாகிய கல் ஆலமரத்தின், நிழல் - நிழலில் அமர்ந்தருளிய மலைவில்லார் - பெருமலையை வில்லாகக் கொண்டவரும், (மலைவு இல்லார் - சனகாதியரின் மலைவு நீக்கிய வரும்), அருளிய - அருள் செய்த, பொல்லார் - ஆயுதங்களால் பொள்ளப்படாதவராகிய விநாயகரது, இணைமலர் - மலர் போலும் இரு திருவடிகளை - நல்லார் - நல்லறிவினை உடையவர், புனைவர் - வணங்குவர். பொள்ளார் - எதுகை நோக்கிப் பொல்லார் என வந்தது.

**அவையடக்கம்**

தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மையுடைமை யெமையிகழார் - தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மில்
புணராமை கேளாம்புறன்.

தன்னையும் தனக்காதாரமான தலைவனையும் உணர்ந்தபெரியார்கள். தன் உணர்வினால் என்னுடைய சிறுமையை உணர்வார்கள் ஆதலினால் எம்மை இகழமாட்டார்கள். தம்மை உணராது புறங்கூறும் தன்மையர் எம்மைத் தெரிந்துகொள்ளார் ஆதலின் அவர் கூற்று எமக்கு இங்கு வேண்டற்பாற்றற்று. சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம்

கோடைக்கால சமயப்பயிற்சி வகுப்புத் தொடக்கவிழா




ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் தொடங்கப்பெற்றது.



தலைவர்: குடந்தை சப்ஜட்ஜ்


ஸ்ரீ R. லக்ஷ்மண அய்யர் M. A., B. L., அவர்கள்.

குருபூஜை விழாவில்:



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பட்டினப்பிரவேசத்திற்கு எழுந்தருளுகிறார்கள்

கோடைக்கால சமயப்பயிற்சி வகுப்புத் தொடக்கவிழா




ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் தொடங்கப்பெற்றது.



தலைவர்: குடந்தை சப்ஜட்ஜ்

ஸ்ரீ R. லக்ஷ்மண அய்யர் M. A., B. L., அவர்கள்.

குருபூஜை விழாவில்:



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பட்டினப்பிரவேசத்திற்கு எழுந்தருளுகிறார்கள்

முதலிய நூல்களில் கடவுள் உண்டு. பாசம் உண்டு, ஆன்மா உண்டு என்ற முப்பொருள் உண்மை பெறப்படும். இவை உண்மையை உணர்த்தியவை. பதி. பசு, பாசம் மூன்ற னிலக்கணங்களும் முற்சொல்லிய உண்மை உணர்த்தியனவை யும் சேர்ந்து பொது அதிகாரம் ஆகும். பின் ஆறும் சிறப்பதி கரணமாகும். மெய்கண்டதேவருக்கு முன்னரே, வடமொழியும், தமிழ்மொழியும் கலந்துதான் சாத்திரங்கள் எழுதப்பட்டன.

உலகம் ஒடுங்கிநின்று மீளவுளதாமாற்றை வகுத்து ணர்த்து முகத்தானே துணைக்காரண முதலியன இல்வழி இறை வன் உலகிற்கு நிமித்த காரணனாதல் சாலுமாறு யாங்ஙனம் என்ற உண்மைக்குப் பிரமாணம் உணர்த்துதல் இச்சூத்திரம். ஒடுங்கியுளதாம் என்றவழி ஒடுங்கியிநின்றும் மீளவுளதாவது எவ்வாறு என்பதுபற்றிய புனருற்பவமே ஈண்டுக் கூறப் பட்டது. அவையேதானேயா யென்பதனை உலகெலாமாகி வேறுயுடனுமாய் என்றார் வழி நூலாசிரியரும் சங்காரகார ணனாகிய முதல்வன் கலப்பினால் உடலின் உயிர்போல் அவ்வுயிர் களேயாய் பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல் அவற்றின் வேறுமாய், உயிர்க்கு உயிராதற்றன்மையாற் கண் ணொளியின் ஆன்மபோதம்போல் உடனுமாய் நின்று, ஆணை யென்னும் பரியாயப் பெயருடைய தனது சிற்சத்தியான்வரும் இருவினைகளான், அவை இறத்தல், பிறத்தல்களைப்புரியும் வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றிச் சமவேதமாய் நிற்பன்.

1. ஆன்மாக்கள் பலவும் முதல்வன்தானேயாய் நிற்கும்.
2. ஆன்மாக்களுக்கு இருவினை முதல்வனாணையின்வரும்.
3. ஆன்மாக்கள் மாறிப்பிறந்து வரச்செய்யும்.
4. ஆன்மாக்களுக்கும் புறப்பொருளை யுணர்த்துவதாகிய தாதான்மிய சக்தியுடையவன்.

கலப்பினால் அபேதமாய் உலகேயாம். பொருட்டன்மை யால் பேதமாய்த்தானேயாம், உயிர்க்குயிராதற்றன்மையால் உடனேயாய்த்தானே உலகேயாம். பேதாபேதமாம், ஈண்டு இருவினையென்றது முப்பிறவிகளினீட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக்கிடந்த புண்ணிய பாவங்களையென்க. மாயை யினுண்மையும் பெறப்பட்டது. இவை வேண்டப்படுதல்

பற்றி முதல்வன் சுதந்திரத்திற்கு இழுக்கில்லையென்பார். முதல்வனுணையின்வரும் என்றார். முன்னுள்ளதாகிய புண்ணியபாவமென்னும் இருகூற்றுச் சஞ்சிதவினையே தன்பயனாகிய இன்பத்துன்பங்களையும் அவை நுகர்தற்குரிய நிலைக்களமாகிய உடம்பினையுந் தோற்றுவிப்ப உயிர் அவ்வுடலில் அணையும். அதாவது அவ்வின்பத்துன்ப நுகர்ச்சி சடத்துக்குக் கூடாமையிற் சத்தாகிய உயிரே அவ்வுடம்பிற்பொருந்தி அவற்றை அனுபவிக்கும். இதனால் முன்செய்தவினை அனுபவித்தற்கேதுவான முறைமையிலே உளதாம். அவ்வினைகளை வள்ளலாகிய முதல்வனே அவ்வுயிர்கட்குக் கூட்டுவன். செயல்சென்று அணையா. வினைதானே உயிர்கட்குப் பயனாய் வந்து பொருந்தமாட்டாது. ஆன்மாக்களுக்குத் தமக்கென அறிவின்மையாலும், வினை சடமாகலானும், மாயை தாரகமாமத்தன்றாணிற்றலாலும் முதல்வனே அறிந்தணைவிப்பன். முதல்வன் தனதாணையாகிய சிற்சத்தியோடு சமவாயத்தோடு நிற்பன். அம்முதல்வன் ஒன்றே வேறேயென்னும் இருதன்மையுமின்றி அவ்விரண்டிற்கும் பொதுவாய் எங்கணும் வியாபியாய் நிற்றலான் ஆணையினீக்கமின்றி நிற்குமன்றே என மேற்கொண்டது.

## முதற்சூத்திரம்

ஆண்டவன் உண்டு என்பதை உணர்த்துவது முதல் சூத்திரம். ஆண்டவன் எவ்வாறு அநாதியோ அவ்வாறே ஆன்மாக்களும் அநாதி. என்று நீ, அன்று நான், உன் அடிமை அல்லவோ என்பது தாயுமான அடிகள் வாக்கு. வினை—மூன்று. தோன்றுவன, இருப்பன, அழிவன. தோன்றுவதும், அழிவதும் இருத்தல் என்னும் வினையால் அறிக. அவை என்பது இவை, அவை எனச் சுட்டுப்பொருளில்வராது கூட்டம் என்ற பொருளில் வந்துள்ளது. இம்மூவினையும் பாசத்திற்கே உள்ளதன்றிப் பதி, பசு இரண்டிற்கும் அன்று. ஆணவமல சம்பந்தம் உண்மையால் தோன்றி அழிந்தபின் மீண்டும் தோன்றுகின்றன. ஆண்டவன் உடலைக்கொடுத்தது, மல நீங்குதற்பொருட்டே. எப்பொருளும் ஒடுங்கிய இடத்திலேயே தோன்றுமாதலால் அந்தம் ஆதி என்றார். இச்சூத்திரத்தின் உரை ஒருவனோடு ஒருத்தி என்ற சித்தியாரால் இனிது விளங்கும்.

## இரண்டாஞ்சூத்திரம்

உயிர் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போவதற்காகச் சரீரம் உபயோகமாகிறது. ஆயினும் அறிவைப் பெருக்கிக்கொள்ளற்பொருட்டே ஏற்பட்டது. மலம் முற்றிலும் நீங்கினால் ஆன்மா எங்கும் நிறைந்திருக்கும். உதாரணம்:- குடாகாசம், மகாகாசம். சரீரம் மாயையினால் ஏற்பட்டது. இறைவன் அவனேயாய், தானேயாய், அவனேதானேயாய் இருந்து விளங்குகின்றான். இந்நிலை ஒன்றாயும், வேறாயும் உடனாயும் இருக்கும் நிலை. ('இருபா இருபஃது' 2வதுசெய்யுள், சித்தியார் 2வது சூ. 1. செய்யுள் காண்க). இருவினை – நல்வினை, தீவினை. 'இருள்சேர் இருவினை'–குறள். ஆன்மா இறைவன் ஆணைவழியே நீக்கம் இன்றி நிற்கும். ஆன்மாக்களுக்கு இருவினை ஒப்பு நிகழவேண்டி ஆணைநிகழ்த்துகிறது. ஆணையின் ஆன்மாக்களுடன் நீக்கம் இன்றி நிற்றற்கு ஏதுவான பாசம் உண்டு என்பது உணர்த்தப்பட்டது. வியாபகமான ஆன்மா உடம்பினுள் கட்டுப்பட்டுள்ள நிலைமையாலும் மலத்து உள்ளதாலும், பற்றுக்கோடின்றி வாழாது. பாசமாகிய மாயையின் உதவியால் போக்குவரவினையும் இருவினையையும் திரோதான சத்தியையும் கூற இச்சூத்திரம் எழுந்தது. ஆணை - ஆக்ஞா சக்தி.

## மூன்றாஞ்சூத்திரம்

இது ஏழுபிரிவுடையது. இச்சூத்திரம் ஆன்மப்பிரகாசத்தை உணர்த்துகிறது.

1. இல்லையென்கிற அறிவுடனே சொல்லுகையினால் அறிவுயிர் உண்டு. எனது உடல் என்று ஆறும் வேற்றுமைப் பிறிதின்கிழமையிற் பொருள்படக் கூறுகையினால் உடல்வேறு, உயிர்வேறு என்று தோற்றுவதால் ஆன்மா உண்டு.

2. ஐம்புலன்களும் நுகரும் நுகர்ச்சியால் புலன்வேறு, ஆன்மாவேறு என்பதால் ஆன்மா உண்டு.

3. ஐம்பொறிவாயிலாகக் கனவுடலைவிட்டு நனவில் வருகையில் அக்கனவில்வரும் உடல் வேறு என்று அறிவதால் ஆன்மா உண்டு.

526



4. தூக்கத்திலும் நாம் மூச்சுவிடுகின்றோம். ஆனால் சுக துக்கம் தோன்றவில்லை. எனினும் பிராணவாயு உடலில் பல விடத்தும் பல காரியங்களைச் செய்கிறது. அக்காலத்தில் உடலுக்குப் புசிப்பும் தொழிலும் இல்லை. இதனால் பிராண வாயு வேறு, ஆன்மா வேறு. அதனால் ஆன்மா உண்டு என்று தெரிகிறது.

5. எந்தக்காரியத்தையும் மறந்து மறந்து நினைக்கின்றோம். இதனால் இன்பத்துன்பம் உண்டு. இந்த இன்பத்துன்பம் அடையாதான் இறைவன். இன்பத்துள் இன்பம் விழையாதவன் துன்பம் அடையான். இதனால் கண்படின் உண்டி வினையின் மையின் ஆன்மா உண்டு.

6. எழுப்பினான் இறைவன். எழுந்தேன் அடியேன். என் செயலாவது யாதொன்றுமில்லை. இதனால் உணர்த்த உணர்தலின் ஆன்மா உண்டு.

7. ஆன்மா உடலின் வினைக்குத் தக்கவாறு அமைந்து புகுந்திருக்கிறது. வெவ்வேறுபெயர் பெற்றும் இருக்கிறது. இதனால் மாயா இயந்திரதனுவினுள் ஆன்மா உளது என்பது பெறப்படுகிறது.

**நான்காஞ்சூத்திரம்**

ஆன்மாவின் இலக்கணங் கூறப்படுகிறது. ஆன்மா அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தமென்னும் நான்கனுள் ஒன்றன்று. நுண்ணுணர்வின்மையிற் சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சரோடுகூடிநின்று தன்தொழில் நடத்தும் அரசன்போல, சகசமலத்தினான் உணர்வின்றிக்கிடக்கின்றது. கஞ்சுகம்போலுங்கலாதிகளாற் பொதுவகையான உணர்வு நிகழினுஞ் சிறப்புவகையான் உணருமாறு தனக்குச் சூழ்ச்சித் துணையாகிய அவ்வந்தக்கரணங்களோடு கூடிநின்று சாக்கிரம் முதலிய ஐந்தவத்தையுடையதாகின்றது.

அவ்வாறு நின்று அஞ்சவத்தைப்படுதல் ஆன்மாவிற்கு இலக்கணம். இது உயிர்க்குத் தடத்த இலக்கணமெனப்படும் பொதுவியல்பு.

ஆன்மா என்னுஞ் சொற்குப் பொருள் வியாபகம் என்பது. ஆன்மாவிற்கு அநாதியிலே கேவல, சகல, சுத்தமென்று மூன்று அவத்தையும் உண்டு.

ஆன்மாவிற்கு அவற்றிலொன்றன்யிருனும் சகசமலத்துண ராமையால் அவற்ளுடு சந்தித்தது. சந்தித்தவழி அவையுந் தானும் அமைச்சரரசேய்ப்ப நிற்றலான் ஐந்தவத்தைத்தாயிற்று.

இந்த அந்தக்கரணங்கள் தாம் தம்மிற் கீழுள்ளவற்றை நோக்கிச் சித்தாய் நின்றே தம்மைநோக்கி அசித்தாய் நிற்றலால் தன்னை நோக்கியுஞ் சித்தாய் நிற்கும் இவ்வான்மாவாவது அந்தக் கரணங்களாயுள்ள மனோபுத்தி யகங்கார சித்தங்களில் ஒன்றன்று என மேற்கொண்டது.

சித்தம் சிந்தித்தறியும், யான் சிந்தித்தேனென்றறிய மாட்டாது. மனம் அதனைச் சங்கற்ப விகற்பஞ்செய்தறியும், யான் சங்கற்ப விகற்பஞ் செய்தேனென்றறிய மாட்டாது. அகங்காரம் அதனை இன்னதெனத் துணிவேன். யானென்று ஒருப்பட்டமுந்தியறியும். யானொருப்பட்டெழுந்தேனென்றறிய மாட்டாது. புத்தி அதனை இன்னதிதுவென நிச்சயித்தறியும், யான் நிச்சயித்தேன் என்றறிய மாட்டாது. அவ்வாறின்றி அவற்ளுடுகூடி யான் சிந்தித்தேன், பற்றினேன், எழுந்திருந் தேன், நிச்சயித்தேன் என்றறிந்தும் இது சுகம், இது துக்கம், இது மோகம் என்று அறிந்தும் யான் சுகித்தேன், யான் துக்கித் தேன், யான் மோகித்தேன் என்றறிந்தும் பிறவற்றை நோக்கியும் தன்னை நோக்கியும் சித்தாகிய ஆன்மாத் தம்மை நோக்கிச் சித்தாகாத அந்தக்கரணங்களின் ஒன்றல்ல என்ப தாயிற்று.

பிரகாசம் அப்பிரகாசம் என்பன சித்து, அசித்து என்னும் பொருளன, புறக்கருவிகளை நோக்கி ஆன்மாவுக்கு அணுக்கமாய் நிற்றற் சிறப்புறுசூழ்ச்சித்துணையாதல்பற்றி அந்தக்கரணங்கள் அமைச்சரையொக்கும். அந்தக்கரணம் கீழுள்ளவற்றை நோக் கிச் சித்தமாறும், மேலுள்ளவற்றை நோக்கி அசித்தமாமாறும், உயிர் அவ்வாறன்றி யாண்டுஞ்சித்தாமாறும் அறிக. சகச மலமானது ஞானத்திற்குத் திரோதகமாய் அதனை இல்லையென் னும்படி மறைத்துக்கொண்டு நிற்றலான் இனி இவ்வான்மாச் சகச மலத்தினுல் உணர்வின்றி என மேற்கொண்டது. (திரோதகம் - மறைத்தலைச்செய்வது. வடமொழி) சகசமலம் - ஆணவம். புருடதத்துவமென நின்ற உயிர் வெவ்வேருகவே

யுணர்தலான் அந்தக்கரணங்களின் வேறும். உள்ளம் மாயா தனுவிளக்கு ஆகக்காணுதேல் ஒன்றை ஆயாது. அதாவது உயிர் ஆகந்துகமலமெனப்படும் மாயாகாரியாகிய உடம்பு தனக்குக் காட்டாகக்கொண்டு காணுதாயின் ஒரு விடயத்தையும் அறிவ தில்லையாம். சகசமலம் உயிரை அநாதியேபற்றி நிற்கிறது. எனவே காட்டாய் நின்று விடயங்களையறியும் வண்ணம் உயிர் அறிவை விளக்குதல் மாயையின் செய்தி. அவ்வறிவைத் தடை செய்துகொண்டு நிற்றல் மலத்தின் செய்தி. இவ்விரண்டும் இங்கனம் ஒளியுமிருளும்போல் இகலிநிற்பன.

## ஐந்தாஞ்சூத்திரம்

ஐந்தவத்தைப் படும்வழி கருவியும், உயிரும், அமைச்சும், அரசுமேய்ப்ப நிற்பின் அவ்வயே அமையும். முதல்வனுய் ஆண்டைக் காகற்பாலதொரு பயனில்லைபோலும் என்னும் கடாவை ஆசங்கித்து ஆண்டும் இன்றியமையாதது வேண்டப் படுவதாகிய முதல்வருடைய உதவியை அறிவிக்க இரண்டாஞ் சூத்திரத்திேனாடு துணைக்காரண முதற்காரணங்களது இலக் கணமுணர்த்துதல் இவ்வஞ்சாஞ்சூத்திரத்தின் கருத்து. மாயை கன்மங்கள் திரோதானசக்திக்குக் கருவியாய் அதனுளடங்கு தலிற் தமது முதலுபகாரமெனப்படுந் திரோதான சத்தியது இலக்கணங் கூறப்பட்டது.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன தந்தம் விடயங் களை இஃது இன்னதென்று அளவிட்டறிந்தும் அங்கனமறியுந் தம்மையுந் தம்மை அதிட்டித்து நின்று செலுத்தும் அவ் வுயிரையும் அறியமாட்டா. அவ்விந்திரியங்கள்போல் உயிர் களுந் தமது அறிவிற்கு விளங்குவது முதல்வனது சிற்சத்தியான் மேற்கூறிப்போந்த இருவகை யஞ்சவத்தையினின்று வினைப் பயன்களையும் அறிந்து அநுபவிக்குந் தம்மையுந் தம்மைச் செலுத்தி நிற்குந் திருவருளையும் அறியமாட்டா. உயிர்கள் அவ்வாறுணர்தல் காந்தத்தைக்கண்ட இரும்பு அதன் சந்நிதி மாத்திரையின் வலித்துக் கொள்ளப்படுமாறுபோலக் கரணத் தானன்றிச் சங்கற்பத்தான் அதிட்டிக்கும் முதல்வன் சந்நிதி மாத்திரையினும் ஆகலான். அதுபற்றி முதல்வன் விகாரியாத வின்று. ஐம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்றறிந் தாலன்றி அவை ஒரு விடயத்தையும் விடயிக்கமாட்டாது. உயிர்

ஐம்பொறிகளை அவ்வற்றிக்குரிய விடயங்களிற் செலுத்தி யாண்டு இலாடத்தானத்தில் நிற்றலான். ஐம்பொறிகள் உள்ளம் அறியாது. அதாவது அரசனுலேவப்பட்டோர் ஏவிய கரும மாத்திரையினன்றி அதிகத்திற் செல்லமாட்டாமைபோல அவ்வைம்பொறிகள் உயிரையறிய மாட்டாவாயின உயிரும் ஐம்பொறிகளும் தம்முள் இன்றியமையா. தனது சந்நிதியில் அசத்தெல்லாஞ் சூனியமாகலான் மங்கல வடிவினனாய முதல்வன் அவ்வுயிர்போல் அவற்றை அநுபவியான். ஐவகை விடயங்களையும் உயிர்மெய்ப் பொருளாகிய முதல்வனால் உணர்ந்து வேறுதலும், ஒன்றுதலும் இன்றி அவ்விரண்டிற்கும் பொதுவாய் அடங்கி உடனாய் நிலைபெறுதலை அறிவாயாக.

உயிர்களுக்கு பசுத்தத்துவத்தை நீக்கிச் சிவத்தத்துவத்தை விளக்குபுற்கணுளதாகிய; இரக்கம் அருள் முதல்வனுக்கு அநாதியாயுள்ளது. அது சத்தி, அருளும், அவன் அன்றி இல்லை. அவன் அருள் இன்று இல்லை. ஆகையால் தன் வயத்தவனாகிய அம்முதல்வன் விகாரமின்றி நின்றே தனது சத்தி சங்கற்ப மாத்திரையின் அனைத்துஞ் செய்தல் கூடாது.

## ஆறுஞ்சூத்திரம்

மேல் ஐந்து சூத்திரத்தாலுங் தறிப்போந்த பொருள்களுள் யாதுசத்து யாது அசத்து என்னும் ஐயம் நீக்குதற்குச் சத்தினியல்பும் அசத்தினியல்பும் இவையென அவ்விரண்டும் இலக்கணத்தாற்றம்முன் மயங்காதவாறு வரைந்து வைத்துணர்த்தினார். உண்மை அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்யுமுகத்தானே பதிப்பொருளதிலக்கணங் கூறுதல் இவ்வாறுஞ் சூத்திரத்தின் கருத்து. தம்முணர்வினனாகிய முதற்பொருள் அளவைகளானறியப்படும் இயல்பிற்றெனின், அங ்ஙனமறியப்படும் பிரபஞ்சம்போல் அழிபொருளாகிய அசத்தாம். அறியப்படாத இயல்பிற்றெனில், அங்ஙனமறியப்படாத முயற்கோடுபோலச் சூனியப் பொருளாம். ஆகலான் இவ்விருபகுதியுமின்றி ஒருவாற்றானறியப்படாமையும் - ஒருவாற்றானறியப் படுதலுமாகிய இரண்டு வகையாலுஞ் சிவசத்தாமெனக் கூறுவர் மெய்யுணர்வினிலை பெற்றுயர்ந்தோர்.

இருதிறனுமின்றி இரண்டு வகையாலுஞ் சித்தாதலுஞ் சத்தாதலு முடையவனாய் நிற்றல் முதல்வனுக்கிலக்கணமென உணர்க. இது சொரூபலக்கண மெனப்படுஞ் சிறப்பிலக்கண

மெனக்கொள்க. முதல்வனுக்குள்ளவாகிய சிறப்பியல்புக்குணங்க ளெல்லாம் இவ்விரண்டினுள் அடங்கும். முதல்வனுக்குரிய மற்றைச் சிறப்பியல்புக்குணங்களாவன :— சர்வஞ்ஞத்துவம் முதலாயின. இவற்றின் விரிவை நீலகண்டபாடியத்தில் 3-ம் அத்தியாயத்து - 2-பாதத்தில் உபயலிங்காதி கரணத்திற் காண்க. ஏனைப்பசு பாசங்களுக்கு சிறப்பியல்புபற்றி உணர்தல் சிவஞானத்தானன்றி அமையாது. இதனுள் உணருருவசத்தெனி னுணராதின்மையினென்றது ஓரதிகரணம். இருதிறனல்லது இரண்டுவகையிற் சிவசத்தும் என்றது ஓரதிகரணம். ஆக இரண்டதிகாணத்தது இச்சூத்திரமென்றுணர்க.

சுட்டறிவினுல் அறியப்பட்ட சுட்டுப் பொருளெல்லாம் அசத்து. நையாயிகம் மதம்:- பிரபஞ்சம்போல முதல்வனும் அளவைகளான் அளந்தறிபொருளே என்பது. அந்த மத மறுப்பு அச்சுட்டுப் பொருள்கள்தாம் இராசதகுணமிகுதிப் பாட்டில் உள்ளதென்னும் உணர்விற்கு விடயமாம் உபலத் தியைப் பயப்பது நின்றுதானே தாமதகுண மிகுதிப்பாட்டான் இல்லையென்னும் உணர்விற்கு விடயமாய் அநுபலத்தியைப் பயப்பித்து நிற்றலான் சுண்டறிவினு லறியப்பட்ட சுட்டு அசத்து என மேற்கொண்டது. சிவஞான சித்தியார் 7 சிவாக்கிரயோகியாருரை 16 காண்க.

சுண்டுப்பிரகாசம் அப்பிரகாசமென்பன உபலத்தி அநுப லத்தியென்னும் பொருளவாய் அவை நிகழ்தற்கிடனுகிய சுட் டறிவதாகிய பிரபஞ்சத்தின் மேனின்றன. சத்தினியல்பை யறிந்தோன் ஆராயப்பெற்றதெனின் அறிவினுலறியப்பட்டன வெல்லாம் அசத்தேயாம். சாங்கியர்மதம்:- எல்லாப்பொருளும் சத்தாகலின் அளந்தறி பொருளுஞ் சத்தேயாம். அதன் மறப்பு. அங்ஙனந்தோன்றி மறைவனவாய பிரபஞ்சம் அசத்தாமாற் றிற்கு உவமையாராயின் நிகழாநின்ற நீர்மேலெழுத்துங்கனவிற் காட்சியும் பேய்த்தேருமாம். நாதம் முடிவான பாசஞானத்தை வாக்கென்றும் அவற்றின் வேறாய பசுஞானத்தை மனமென்றும் உபசாரவழக்காற் கூறினர். வாக்குமனுதீதகோசரமாய் நின்ற என்பது அவ்விரண்டின் விருத்திகளைக் கடந்து அதீதமாயும் ஒற்றுமைப்பட்டு நின்றுணரும் அநுபவஞானமாத்திரைக்கே விளங்கிக் கோசரிப்பதாயும் நின்ற என்றவாறு. (வரும்)

---

இது சிவஞானபோதச் சிற்றுரையைத் தழுவியது.



ஆதீனக் கல்வி நிலைய மாணவர்கள் நடித்த 'மங்கையர்க்கரசி' நாடகத்தில் சம்பந்தர் பாண்டியனுக்கு வெப்புநோய் தீர்க்கும்காட்சி.



'திருஞானசம்பந்தர்' என்னும் நாடகத்தில் நடித்த சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலைய மாணவியர்.



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களும்,
சென்னை முதலமைச்சர் கனம். ஸ்ரீ காமராஜ நாடார் அவர்களும்.

# ஆதீனத்திலும், ஆதீன தேவஸ்தானங்களிலும்:

## முதலமைச்சர் விஜயம்

16—5—54 ஞாயிற்றுக்கிழமை இரவு 10-மணிக்கு சென்னை ராஜ்ய முதன்மந்திரி **கனம் ஸ்ரீ காமராஜ் நாடார்** அவர்கள் ஆதீனத்துக்கு விஜயம் செய்தார்கள். ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமி கோயிலில் அமைந்துள்ள ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவியைத் தரிசித்து, ஆதீன நூல்நிலையம், பதிப்பகம் முதலியவைகளைப் பார்வையிட்டார்கள். பிறகு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களுடன் சிறிதுநேரம் அளவளாவியபின் மாயூரத்திற்குப் புறப்பட்டார்கள்.

## அறநிலைய அமைச்சர் விஜயம்

6—6—54 ஞாயிற்றுக்கிழமை காலை 11மணிக்குசென்னை ராஜ்ய அறநிலைய அமைச்சர் **கனம் ஸ்ரீ பரமேசுவரன்** அவர்கள் ஆதீனத்துக்கு விஜயம்செய்தார்கள். ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகையைத் தரிசித்து ஆதீனப் பல்கலைக்கல்லூரி, நூல்நிலையம், பதிப்பகம் முதலியவைகளைப் பார்வையிட்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் சிறிதுநேரம் அளவளாவினார்கள். நண்பகல் உணவுக்குப்பின் அமைச்சர் அவர்கள் மாயூரம் புறப்பட்டார்கள்.

## சர். ஏ. இராமசாமி முதலியாரவர்கள் விஜயம்

6—6—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு சென்னை **சர். ஏ. இராமசாமி முதலியார்** அவர்கள் தருமைக்கு விஜயம் செய்தார்கள். ஆதீனச்சார்பில் அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவியைத் தரிசித்து பிறகு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தார்கள். சிறிதுநேரம் உரையாடியபிறகு, தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி தேவஸ்தானத்திற்குப் புறப்பட்டார்கள். ஆலயச்சார்பில் வரவேற்பளிக்கப்பெற்றது.

532



## ஜன்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்கள்தோறும் அபிஷேக ஆராதனைகள் செய்துவரும் வழக்கப்படி இம்மாதத்திலும் 10—6—54 அன்று திருஇராமனதீச்சரம் ஸ்ரீ இராமநாதசுவாமி ஆலயத்தில் ஆதீன வெளியீடாக அச்சிட்ட "திருஇராமனதீச்சரத் திருப்பதிகம்" இலவசமாக வந்திருந்த அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. ஆதீன ஓதுவாமூர்த்திகளைக்கொண்டு பண்முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதப்பெற்றது.

## வேளூரில் வசந்தோற்சவத் திருவிழா

வேளூர் ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கு ஜயவருஷ சித்திரைமீ 26வ முதல் வைகாசிமீ 4வ முடிய வசந்தோற்சவத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. வசந்தமண்டபத்தில் சுவாமி அம்பாள் எழுந்தருளியிருந்து அருட்காட்சி வழங்கினர். விழாவை ஒட்டி இசைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. 10—5—54 திங்கட்கிழமை திரு. T. S. வேம்பு அய்யர் அவர்கள் பாட்டு; 11—5—54 செவ்வாய்க்கிழமை திரு. T. V. நமசிவாயம் அவர்கள் பாட்டு, தருமபுர ஆதீனம் இசைக்கல்லூரித் தலைமையாசிரியர் திரு. T. S. சம்பந்தம்பிள்ளை அவர்கள் பிடில், தருமபுர ஆதீனம் இசைக்கல்லூரி மிருதங்க ஆசிரியர், குத்தாலம் திரு. R. விசுவநாத அய்யர் அவர்கள் மிருதங்கம். 12—5—54 புதன்கிழமை திருமதி. குமாரி S. சீதா & பார்ட்டியார் பாட்டு. 13—5—54 வியாழக்கிழமை சென்னை, தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத் திருமுறை ஆசிரியர். சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதமுதலியார் அவர்கள் & பார்ட்டி பாட்டு. 14—5—54 வெள்ளிக்கிழமை திருமதி. அனுராதா & பார்ட்டி பாட்டு. 15—5—54சனிக்கிழமை திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி வீணையாசிரியர் திரு. R. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் & பார்ட்டி வீணை, 16—5—54 ஞாயிற்றுக்கிழமை திருமதி. கோமளவல்லீசீனுவாசன் & பார்ட்டி பிடில்.

## திருக்குவளையில்

சப்தவிடங்கஸ்தலங்களுள் ஒன்ருய திருக்குவளை என வழங்கும் திருக்கோளிலி ஸ்ரீ வண்டமர்பூங்குழலி சமேத ஸ்ரீ தியாகராஜப்பெருமானுக்கு 30—4—54ல் தொடங்கி 17—5—54 முடிய பிரமோற்சவத் திருவிழா நடைபெற்றது. திருவிழாநாட்களில் சமயச்சொற்பொழிவுகள் நடைபெற்றன. 8—5—54 சனிக்கிழமை நாகை, தேசிய உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள் "அருள்நிலை" என்பதுபற்றியும், 9—5—54 ஞாயிற்றுக்கிழமை திருவாரூர், போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. மு. இரத்தினதேசிகரவர்கள் "உயிர்நிலை" என்பதுபற்றியும், 10—5—54 திங்கட்கிழமை குத்தாலம், போர்டு ஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் "பொதுநிலை" என்பதுபற்றியும், 11—5—54 செவ்வாய்க்கிழமை அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சியாளர், வித்துவான், திரு, G. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் "ஆநந்தக்கூத்து" என்பதுபற்றியும், 12—5—54 புதன்கிழமை வித்துவான், திரு. க. வெள்ளைவாரணனுர் அவர்கள் "நெல்மலை" என்பது பற்றியும், 13—5—54 வியாழக்கிழமை திரு. மு. அருணுசலம் பிள்ளை அவர்கள் "கோவை" என்பதுபற்றியும், 14—5—54 வெள்ளிக்கிழமை சிதம்பரம், பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழாசிரியர், வித்துவான், திரு. சேதுசுப்பிரமணியபிள்ளை அவர்கள் "அரசியலும் சமயமும்" என்பதுபற்றியும், 15—5—54 சனிக்கிழமை திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி தலைமையாசிரியர், வித்வான், திரு. K. M. வேங்கடராமையா அவர்கள் "மூவேந்தர்" என்பதுபற்றியும், 16—5—54 ஞாயிற்றுக்கிழமை திருக்கருகாவூர் சமயத்தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்கள் "அன்புநிலை" என்பதுபற்றியும், 17—5—54 திங்கட்கிழமை குடந்தை முனிசிபல் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர், வித்துவான், திரு. சுந்தரேசஞ்செட்டியார் அவர்கள் "மாதவன் மகாதேவனுன மாண்பு" என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர்.

# மதிப்புரைகள்

**திருவாசக ஆராய்ச்சிப் பேருரை:-** உரையாசிரியர் பண்டிதமணி திரு. கா. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள். பதிப்பாசிரியர் இராஜ சிவசாம்பசிவ சர்மா அவர்கள். விலை ரூ. 15—0—0 டிம்மி சைஸ் பக்கங்கள் 1192. கிடைக்குமிடங்கள். உரையாசிரியர் மாவிட்டபுரம் தெல்லிப் பழை, இலங்கை. கபீர் அச்சகம், 193, ஹைரோடு திருவல் லிக்கேணி, சென்னை.

முற்காலத்தும் பிற்காலத்தும் பல உரைகள் வெளிவந்த பின்பும் இப்பேருரை வெளிவருகிறது. மகாவித்துவான் தியாகராச செட்டியார் அவர்கள் திருவாசக விரிவுரை எழுது வோருக்கு இன்றியமையாதன என்று கூறிய உபநிஷத முதலியவற்றின் அறிவு இவ்வுரையாசிரியருக்கு அமைந் திருத்தல் எடுத்த இடங்களிலெல்லாம் இவ்வுரையின் தனிச் சிறப்பு. சிவாநுபவமுதிர்ச்சி திருவாசகத் தேனை அருளியது போல சித்தாந்த ஞானுநுபவ முதிர்ச்சியால் இப்பேருரை விளைந்ததெனலே அமையும். மிகை வேண்டா. இப்பதிப்பில் ஆங்காங்கு எழுத்துப் பிழைகளும் இல்லாமல் இல்லை. பழுத்த தமிழ்ப் புலமையோடு நிரம்பிய திருவருள் ஞானம் இத் தகைய பேருரையைத் தந்திருக்கிறது. இதனை ஒவ்வொரு தமிழ்மகனும் வைத்திருத்தல் இன்றியமையாத கடமை யாகும்.

**நாலடியார் உரைவளம் 2 பாகங்கள் :-** தஞ்சை சரஸ்வதிமகால் வெளியீடு. பக்கங்கள் 1000-க்குமேல்.

திருக்குறளுக்கு சிறந்ததொரு உரைவளத்தை திருத் தருமபுரம் அளித்தபிறகு நாலடியாருக்கும் அதே அமைப்பில் உரைவளம் வந்தது மிகமிகப் போற்றுதற்குரியது. ஆன்றறிந் தடங்கிய கொள்கைச் சான்றோராகிய திரு. முத்துரத்ன முதலியார் அவர்களின் முயற்சி மிகச் சிறந்தது. இத்தகைய உரைவள வெளியீடுகள் எல்லாநூல்கட்கும் கிடைக்குமானல்

535

ஒரு நூற்பயிற்சியாலேயே பல நூல்பயின்ற பயனைத் தமிழ் உலகம் அடையும்.

**நாடக விழாமலர் :-** 1954 பம்பாய்த் தமிழ்ச்சங்கம் மாதுங்கா. பக்கங்கள் 116.

பம்பாய்த் தமிழ்ச்சங்கம் பைந்தமிழைப் பேணி வளர்க்கின்றது. பாரெல்லாம் தமிழ் மணங் கமழச்செய்கின்றது. நாள்தோறும் வாரங்கள்தோறும் மாதங்கள்தோறும் சிறப்புக் கூட்டங்கள் கூட்டிச் சீர்பெறச் செந்தமிழைப் புரக்கின்றது. இயல், இசை நாடகங்கள் வாயிலாகப் பணிசெய்யும் இச்சங்கத்தார் இந்நாடக விழாமலரை உலகிற்களிக்கிறார்கள். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களின் கவிதை மணமும், வித்துவான், ஆ. கி. ஜயலக்ஷ்மி அவர்களின் 'ஆடிஞள்மாதவி' என்ற கட்டுரையின் மணமும், இந்திய நாடகமேடைகள் என்ற தலைப்பில், தமிழகம், வங்காளம், குஜராத், ஆந்திரம் ஆகிய நாட்டுக்கலைகளைத் தெரிவிக்கும் உரைமணமும் மற்றும் கி. ஆ. பெ. விஸ்வநாதம் வையாபுரிப்பிள்ளை முதலியவர்களுடைய நாடகங்களின் விமர்சனங்களும் இம்மலரைச் சிறந்த வகையில் மணக்கச்செய்கின்றன.

**தெய்வத் தமிழ்மலர் :-** 2-ம் பதிப்பு. திருவருட் கழகம், புதுவயல். 60 பக்கங்கள். விலை அணு 0—4—0.

கடவுளைக் கன்னித்தமிழ் கூறிக் களிப்பூட்டவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக்கொண்டு திரு அழகப்பச் செட்டியார் அவர்கள் திருவருட் கழகச்சார்பில் இந்நூலை வெளியிட்டுள்ளார்கள். சிவன், பார்வதி, விநாயகர், முருகன் இவர்களுக்குரிய மலர் வணக்கப் பாடல்கள் இந்நூலில் உள்ளன.

## சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
## சமயப்பிரசார நிலையம்

### வேலூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தில்

# பெரியபுராண விரிவுரை.

*9—5—54* ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு தவத்திரு அமிர்தானந்த யோகியாரவர்கள் 'மூர்த்திநாயனார்' வரலாறுபற்றிச் சொற்பொழி வாற்றினார்கள். பாண்டி நாட்டின் பழம்பதியாகிய மதுரையில் வணிகர்குலத்தில் அவதரித்தமூர்த்தி நாயனார் சொக்கலிங்கப் பெருமானுக்குச் சந்தனக்காப்பு அணிவிக்கும் பெருந்தொண்டில் ஈடுபட்டார். சமணர்களது துர்ப்போதனையால் அரசன் நாயனார் தொண்டிற்கு இடையூறு செய்வித்தான். நாயனார் பக்தியின் உறுதியால் தமது முழங்கையினையே சந்தனக்கட்டையாகப் பயன் படுத்தினார் அருள்நெறி பரவவேண்டுமென்று எண்ணிய நாயனார் கருத்தின் வழியே திருநீறே அபிடேகப் பொருளாகவும், உருத்திராக்கமே ஆபரணமாகவும், சடாமுடியே மகுடமாகவும் கொண்டு முடிசூடி மூர்த்திநாயனாரே மேன்மை கொள் சைவநீதி விளங்க அரசுபுரிந்து அரனடியடைந்தார். எனத்தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள்.

*16—5—54* ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு முருகநாயனார் வரலாறுபற்றி கடப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள் நிகழ்த்து கையில் முருகநாயனார் சோழநாட்டில் திருப்புகலூரில் அவதரித்தவரென்றும், நாள்தோறும் பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தற்குப் பத்தராகி அரும்பொடு மலர்கள்கொண்டாங்கு ஆர்வத்தை உள்ளேவைத்து வழிபாடாற்றினாரென்றும் திருஞானசம்பந்தருடைய தோழராய் அவருடன்பலதலங்களை வணங்கித் திருஞானசம்பந்தர் திருமணத்தைக் கண்டு தரிசித்து அங்கெழுந்த சோதியில் கலந்தருளினாரென்றும் அறிவித்தார்கள்.

537



23—5—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு உருத்திரபசுபதி நாயனர் வரலாறு பற்றிக் கயப்பாக்கம் திரு சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள் பேசினர்கள். பேசுகை யில் சோழநாட்டுத் திருத்தலையூரில் வேதியர்குலத்துதித்த இந்நாயனர் உருத்திர மந்திரத்தைக் கழுத்தளவு தண்ணீரில் நின்று உருவேற்றியதால் உருத்திர பசுபதி என்ற திருப் பெயர்பெற்றார் என அறிவித்தார்கள்.

30—5—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணியள வில் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் திருநாளைப்போவார் நாயனர் வரலாறுபற்றிச் சொற்பொழி வாற்றினர்கள். திருநாளைப்போவார் சோழவளநாட்டில் ஆதனூரில் புலையர் சேரியில் அவதரித்தார். தங்குல ஆசாரப் படி இறைபணிக்குதவும் வாத்தியங்களுக்குத் தோல் முதலி யன கொடுத்தும், இறைவனுக்குக் கோரோசனை கொடுத்தும் கோயில் புறத்தில் ஆனந்தக் கூத்தாடுவார். பக்திப்பெருக் கால் சாதிகுலச் சழக்கினையகற்றித் தில்லைக்கூத்தன் திருவடி தெரிசித்துப் பேரின்பநிலை எய்தினர் எனத் தமதுசொற்பொழி வில் குறிப்பிட்டார்கள்.

6—6—54 ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழு மணிக்கு வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் திருக்குறிப்புத் தொண்டநாயனர் வரலாறுபற்றி விரிவுரை செய்தார்கள். சான்றோருடைத்து எனப் போற்றப்பெற்ற தொண்டைநாட்டிலே காஞ்சிமாநகரத்தில் ஏகாலியர் குலத்தில் குறிப்பறிந்து அடியவர்க்குத் தொண்டு புரிந்தமையால் நாயனர் இப்பெயர்பெற்றார் என்றும் "குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள் யாது கொடுத்துங்கொளல்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கியமாய் வாழ்ந்தவர் என்றும் குறிப்பிட்டு மேலும் நாயனர் வரலாற்றல் குறிப்பறிதலும், சொன்னசொல் தவருது தொண்டுசெய்தலும், குலதருமம் செய்தலும் முதலிய நற்பண்புகளைத் தெரிந்துகொள்ளுகிறோம் என்றும் அறிவித்தார்கள்.

---

538

தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

# குருபூஜை விழா

9—6—54 புதன்கிழமை தருமபுர ஆதீனம் 24வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் குருபூஜை விழா. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரே முன்னேற்பாடுகள் தொடங்கி முடிந்தன. விசேஷமான மின் விளக்குகள் அலங்கரிக்கப்பெற்று நடைப்பந்தல் கொட்டகைகள் போடப்பெற்றன.

**காலை வழிபாடு :**

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குருபூஜைத் திருநாள் அன்று காலை 8 மணிக்கெல்லாம் ஸ்ரீ சொக்கலிங்கப் பூஜையை முடித்துக்கொண்டு குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளினார்கள். மேலவீதியில் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசர் ஆலயத்தினருகே சிறப்பாக எடுக்கப்பெற்ற—தென்பாலமைந்த விமானக் கோயில் 24ஆவது மகாசந்நிதானம் அவர்களது குருமூர்த்த மாகும். ஆலயத்தில் அமைக்கப்பெற்ற சிவலிங்கத் திருவுருவத்திற்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஏனைய அடியவர் பெருமக்களும் அன்பர்களும் கூடியிருந்து தரிசித்தனர். காலை 9 மணிக்கெல்லாம் வழிபாடு முடிவடைந்தது.

திருப்பனந்தாள், காசிமடம் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான்சுவாமிகள்** அவர்கள் தருமைக்கு எழுந்தருளி குருமூர்த்தங்களைத் தரிசித்தார்கள். புதிதாக அமைக்கப்பெற்ற ஆதீன மடாலய முகப்புக் கொட்டகையைப் பார்வையிட்டார்கள். மாலை 3 மணிக்குத் திருப்பனந்தாளிற்கு எழுந்தருளியானார்கள்.

திருப்பனந்தாள் காசிமடம் இளவரசு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளவர்கள் காலை 7 மணிக்குத் தருமைக்கு எழுந்தருளி ஸ்ரீ சொக்கலிங்கபெருமானைத் தரிசித்து குருமூர்த்ததரிசனம் செய்து திருப்பனந்தாளிற்கு எழுந்தருளினார்கள்.

**சொற்பொழிவுகள் :**

குருபூஜைத் திருவிழாவை முன்னிட்டு சந்நிதியில் சொற்பொழிவுகள் நடைபெற்றன. திருப்பனந்தாள் காசிமடத்து இளவரசு வித்துவான் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் தலைமைதாங்கினர்கள்.

**தலைமையுரை:**

திருப்பனந்தாள் காசிமடத்து இளவரசு வித்துவான், ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகளவர்கள், தலைமை உரையில் பாமரர்களை நாடகங்களின்மூலம் கவரமுடியும்; கற்றுத் தேர்ந்தவர்களைப் பிரசங்கங்கள், பத்திரிகைகளின் மூலம் கவரமுடியும். ஆனால், பிரசங்கங்களெல்லாம் பசிதீர்ந்த பிறகுதான். நாட்டிலே பசி நிலைபெற்றுள்ளமட்டும் சித்தாந்த சாத்திரங்கள் எங்கெங்கும் பரவுதல் என்பது இயலாது. ஆகவே எல்லோரும் பசிப்பிணி மருத்துவர்களாக மாற வேண்டும். இன்றைக்கு மக்களிடத்தில் சமயக்கொள்கை மாறவில்லை; புழுதிபடிந்து கிடக்கிறது.

முப்பொருள்கள்.- உலகம், உயிர், இறை. இதைத்தான் சித்தாந்தம் பாசம், பசு, பதி என்கிறது. அருளைவளர்க்க பொருளும்வேண்டும். அதனால்தான் வள்ளுவரும், 'அருளென்னும் அன்பீன்குழவிபொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு' என்று அருளினர். அருளை வளர்க்கும் நிலையங்கள் தாம் ஆதீனங்கள்.

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழிநல்லை வாழிய நிலனே'

என்ற புறநானூற்றுப் பாடலை நன்கு சிந்திக்கவேண்டும்.

'சிறுமையும் பெருமையும் தான்தரவருமே'

'தீதும் நன்றும் பிறர்தரவாரா'

என்பவைகள் நாம் நன்கு சிந்தித்தற்குரியன.

எங்கள் குருஞானசம்பந்தப்பெருமானும்

'அவரவர்க்குள்ளபடி ஈசன் அருளாலே'

என்ற சிவபோகசாரப் பாடலில் 'எல்லாம் எனையாளும் ஈசன்செயல்' என்று முடிந்த முடிபை மொழிந்துள்ளார்கள்.

ந40



வினைக்குத் தக்கபடியே யாவும் நடக்கிறது. 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்—தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்ற பழமொழி நம் சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளது:

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப'

என்ற வள்ளுவர் வாக்குப்படி திண்ணியராகி எல்லோரும் எண்ணிய எண்ணியாங் கெய்தும் திறம்பெறவேண்டும். அதனைத்தான்—அதற்குரிய வழியைத்தான் சைவசித்தாந்தம் கூறுகின்றது.

இன்று பேச இருக்கும் சாத்திரமாகிய மெய்கண்டார் நூல்கள் நம்மை வாழ்விப்பவை. அதிலும் முதலிலே உள்ள சிவஞானசித்தியார் சிறப்புவாய்ந்த சித்தாந்தசாகரம் ஆகும். அதனால்தான்

"பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே
ஓர் விருத்தப்பாதி போதும்"

என்ற வாக்கு எழுந்தது.

மெய்கண்டதேவர் அருளிச்செய்த மேன்மைமிக்க இச் சாத்திரங்கள் நாம் மெய்கண்டு தெளிவதற்கும் உரித்தானவை அல்லவா?

எனவே, இத்தகைய சிறப்புவாய்ந்த சித்தாந்த சாத்திரங் களைப்பற்றி இன்று பலர் பேசும் வாய்ப்பைத் திருவருள் கூட்டியிருக்கிறது. கேட்டு உய்வது நம்மனோர் கடமை. என்று தலைமைப்பேருரை யாற்றினார்கள்.

**வரவேற்புரை**

முதலில், தொடக்கவுரையாற்றி அனைவரையும் வரவேற்ற ஆதீனப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்,

சித்தாந்த சாத்திரங்கள் பரவ தருமை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் செய்துவரும் தளராத பணிகளைக் குறிப் பிட்டு, அவர்கள் வழிநின்றொழுகும் பனசை இளவரசு ஸ்ரீ-ல-ஸ்ரீ சுவாமிகளை வரவேற்றுப் பேசுகையில் புதுமை மெருகிட்டுப் பழமையான கருத்துக்களை உலகுக்கு இன்று உணர்த்தவேண்டும். இல்லையேல் யாவும் பயனற்றதாய் முடியும். அவ்வாறு பழம் பெரும் சாத்திரக் கருத்துக்களை

யெல்லாம் புதுமெருகிட்டுத் தமிழ்ச் சமுதாயத்தை ஈர்த்து, மூலபண்டாரம் வழங்குகின்றோம் வந்து முந்துமினே என்று வழங்கி வருபவர்கள் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ இளவரசு சுவாமிகள் என்று விளக்கினர்கள்; அம்மட்டோடின்றி ஸ்ரீலஸ்ரீ எஜமான் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அறக் கட்டளைகளையெல்லாம் செம்மைபெற நிறைவேற்றும் ஸ்ரீலஸ்ரீ இளவரசு சுவாமிகளவர்களைப் பாராட்டி, அவர்கள் தலைமை பெறற்கரிய பெரும்பேருக அமைந்தது; ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் குருவருளும் திருவருளும் செய்த திறம் என்று பேசிமுடித்தார்கள்.

மெய்கண்டார் சாத்திரமாகிய பதினுன்கு சித்தாந்தசாத்திரங்களைப் பற்றியும் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். திருவாரூர் இராஜாங்கக்கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் 'சிவஞான சித்தியார்' என்பது பற்றியும், சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை, வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'சிவப்பிரகாசம்' என்பது பற்றியும், திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை, ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'நெஞ்சுவிடு தூது' பற்றியும், மாயூரம் குமரக்கட்டளை கட்டளைவிசாரணை ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'திருவுந்தியார்' பற்றியும், குறுக்கை தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'உண்மைநெறி விளக்கம்' பற்றியும், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'சங்கற்ப நிராகரணம்' பற்றியும் ஆதீனக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்கள் புலவர். திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'இருபா இருபஃது' பற்றியும், வித்துவான் திரு. வி. சா. குருசாமி அவர்கள் 'திருக்களிற்றுப்படியார்' பற்றியும், வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் 'போற்றிப் பஃறொடை' பற்றியும், ஆதீன ஓரியண்டல் ஹைஸ்கூல் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. திருஞானசம்பந்தம் அவர்கள் 'திருவருட்பயன்' பற்றியும் ஆதீன ஆகமபாடசாலை தலைமை ஆசிரியர் ஆகம வித்துவான், திரு. S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் 'சிவஞானபோதம்' பற்றியும், ஆகமபாடசாலை ஆசிரியர் சிரோமணி. திரு. M. S. சுப்பிரமணியசர்மா அவர்கள் 'கொடிக்கவி' பற்றியும் ஆதீனத் தேவாரப்பாடசாலை, தேவார ஆசிரியர், திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள் 'வினு

வெண்பா' பற்றியும் ஆதீனப் பல்கலைக் கல்லூரி மாணவர் திரு. ம. சிவசம்பு அவர்கள் 'உண்மைவிளக்கம்' பற்றியும் ஆதீனப் பல்கலைக்கல்லூரி வடமொழி ஆசிரியர், சிரோமணி திரு. K. இராஜகோபால சாஸ்திரிகள் அவர்கள் 'சிவபோக சாரம்' பற்றியும் காலை 9 மணிமுதல் 1 மணிவரையிலும் மாலை 3 மணிமுதல் 6 மணிவரையிலும் சொற்பொழி வாற்றினர்.

**மகேஸ்வர பூஜை:**

நடுப்பகல் 1 மணிக்கு ஆதீன மடாலயத்தில் மகேஸ்வர பூஜை நடைபெற்றது.

**இசை நிகழ்ச்சி:**

மாலை 6 மணிக்கு ஆதீன மடாலய முகப்பில் இசை யுலகிற் சிறந்துவிளங்கும் சென்னை சங்கீதவாணி, ஸ்ரீமதி M. L. வசந்தகுமாரி அவர்கள் & பார்ட்டியாரின் இசைவிருந்து வந்தாரை மகிழ்விக்கும் வனப்புடனும் நாதமயமான இறைவ னுடன் இணைக்கும் வகையிலும் அமைந்து விளங்கியது.

**இரவு 10 மணிக்கு:**

இரவு ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளினார்கள். விசேஷமான அலங்காரங் திருவாபரணங் களாலும் புஷ்பங்களாலும் மும்மூர்த்திகளும் அலங்கரிக்கப்பெற்றிருந்தனர். தீப ஆராதனைகளும் வழிபாடு களும் முடிந்தபின் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் வந்திருந்த அன்பர்களுக்கு திருநீறளித்தார்கள்.

**விழாமலர்:**

இன்றைய குருபூஜை விழாமலராக "அறுவகைச்சமயம்" என்னும்நூல் வெளியிடப்பெற்றது. பழநி சைவசித்தாந்த சரபம் சிவஸ்ரீ ஈசானசிவாசாரிய சுவாமிகள் சாஸ்திரங்களில் பாரபக்ஷமாக வருகின்ற அறுவகைச்சமயக் கொள்கைகளையும் அதற்கு சுபக்ஷவாயிலாக கூறும் பதில்களுடனும் அழகுற உரைநடையில் எழுதியிருக்கும் இந்நூல் அன்பர்களுக்கு வழக்கப்பெற்றது.

**நாடகம்:**

இரவு 11 மணிக்கு ஆதீன மடாலய முகப்புக்கொட்ட கையில் "திருநாவுக்கரசுசுவாமிகள்' நாடகம் ஆதீனக்கல்வி நிலையமாணவர்களால் பக்தி உணர்ச்சிததும்ப நடித்துக் காட்டப்பெற்றது.

5012.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ முத்து சோதிடர், திருவிடைமருதூர்.

(ஜய-ஸூ ஆனி-மீ 1-உ முதல் 31-உ முடிய)

(15—6—54 முதல் 15—7—54 முடிய)

**1. மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼

அசுவதி 1, 2, பாதங்களும் பரணி முதல்பாதமும் தவ பலத்தை உண்டுபண்ணி சந்தோஷத்தையும் மங்கள காரியங்களையும் நஷ்டதன பிராப்தியையும் தரும். அசுவதி 3. 4. பாதங்களும் பரணி 2, 3, 4 பாதங்களும் அசுபத்தைத்தரும். எங்கும் அபகீர்த்தியையும் தேவகோபத்தையும் தந்து உலகத்தோர் அவமதிக்கும்படியான காரியங்களையும் சத்தானதெல்லாம் அசத்தாகமாறியும் உலகத்துக்கு விரோதமான நடையையும் பெரிய கிரிமினல் வியவஹாரங்களையும் எதிர்பாராத ஆபத்தையும் தரும். தெய்வபலமிருந்தால் மறையும். கார்த்திகை முதல்பாதம் வியாதியையும் நஷ்டத்தையும் கலஹத்தையும் தந்து மனோவியாகூலம் உண்டுபண்ணும். சனி செவ்வாய் நலன் காட்டும்.

**2. விருஷபம்:** கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரிஷம் ½

விருஷபராசி பூராவுமே இம்மாதம் சுபமிராது. இரண்டேகால் நக்ஷத்திர பாதங்களும் அசுபத்தையே தரும். ரோகம், அபவாதம் இடம்மாறல், தொழில் நஷ்டம், மேலோர் பெரியோர் கோபம், கலஹம், தெய்வசாபம், துர்தெய்வதாரூபமான பீடை அவநம்பிக்கை புத்திமாறல் முதலிய துஷ்டபலன் காட்டி, எதிர்காலத்தின் அசுபத்தை ருசிப்பிக்கச்செய்யும். ஆதலால் கூடியவரை மேல்கண்ட தோஷங்கள் அணுகாமல் இருக்க ஆஸ்தீகர்கள் பாடுபட்டால் ஜயிக்கலாம். வெள்ளியும் புதனும் சுப பலன் தரும்.

5HH



3. **மிதுனம்:** மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் பின்னரையும் திருவாதிரை நான்கு பாதங்களும் மிசிரமாய் நடக்கும். வியாபாரிகள் தொழிலாளிகள் சுகமடைவார்கள். பூமிக்குள்ளோர் தொல்லைகளையும் கஷ்டத்தையும் அடைவார்கள். புனர்பூசம் 1. 2. 3. பாதங்களும் சென்ற மாதம்போலவே நடப்பதோடு குடும்பத்தில் பெரிய ஆபத்துக்களையும் நஷ்டத்தையும் காட்டுமாதலால் கூடியவரை ஜாக்கிரதையாய் இருந்தால் ஆஸ்திகர்கள் காப்பாற்றப்படுவார்கள். சனியும் புதனும் சுபமாகும்.

4. **கடகம்:** புனர்பூசம் ¾ பூசம், ஆயில்யம்,

புனர்பூசம் 4ம்பாதம் சுபத்தைத்தரும். சுபவிரயம் ஏற்படும். இடம் மாறலோடு லாபங்கொடுக்கும். பூசம் முதல்பாதம் கஷ்ட நஷ்டங்களையும் தீராத வியாதி பயத்தையும் பெரியோர் சாபத்தையும் கொடுக்கும். பூசம் 2, 3, 4 பாதங்களும், ஆயில்யம் பூராவும் பூரணசுபத்தைத்தரும். நஷ்டதன பிராப்தி தொழில் மேன்மை, தூர யாத்திரையில் ஜயம் கடன் நிவர்த்தியாகுதல் தெய்வபலம் பிரகாசித்தல் ராஜசபா பிரவேசம் முதலிய சுபங்கள் ஏற்படும். புதன் வெள்ளி சுபமாகும்.

5. **ஸிம்மம்:** மகம், பூரம், உத்திரம் ¼.

சிம்மராசி பலன் சென்ற மாதம்போலவே நடக்கும். விசேஷமாய் உத்யோகலாபமும் தூர யாத்திரையும் விவஹார வெற்றியும். சத்துருநாசமும் கடன் நிவர்த்தியாகுதலும் தொழில் மேன்மையும் விவசாய விருத்தியும் காலிகன்று சேர்க்கையும், வாஹன விருத்தியும் ஏற்படும். சிம்மராசி சம்பந்தப்பட்ட நக்ஷத்திர பாதங்கள் பூராவுமே சுபமாகும். வெள்ளி புதன் சுபவாரமாகும்.

6. **கன்னி:** உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் மூன்றுபாதங்களும் லாபத்தைத்தரும். உத்யோக மேன்மை உண்டாகும், விவசாயம் விருத்தியாகும். காலிகன்று

வாஹனவிருத்தி ஏற்படும். ஹஸ்தம் 1, 4 பாதங்கள் பிரபல ராஜயோகத்தையும் கீர்த்தியையும் குறைவில்லாத செல்வப் பெருக்கையும் தரும். பூரணமான தெய்வபலம் ஓங்கும். ராஜாங்க மதிப்பும் விவஹார வெற்றியும் சத்துரு சரண் அடைதலும் நன்மதிப்பும் விசேஷ பிரதிஷ்டா பலன்களும் தானதர்மபல பிராப்தியும் சதா சஞ்சாரபலமும் தெய்வ சக்தி பிரகாசித்தலும் ஏற்படும். ஹஸ்தம் 2. 3 பாதங்கள் மிகுந்த கஷ்டபலனையும் குடும்பத் தொல்லையையும் தரும். சித்திரை 1, 2 பாதங்கள் தனலாபத்தையும் விவஹார ஜயத்தையும் சத்துரு பராஜயத்தையும் சந்தோஷத்தையும் தரும். புதன், வியாழன், வெள்ளி சுபமாகும்.

7. **துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

விசாகம் 1, 2, 3 பாதங்கள் பூரா அசுபமே கொடுக்கும். தீராத கஷ்டநஷ்டங்களையும் வியாதிபயத்தையும் சத்துரு விருத்தியையும் தரும். மற்ற இருநக்ஷத்திர பாதங்களும் சுபமாகவே நடக்கும். எதிலும் வெற்றி. உலகில் பிரமாதமான கீர்த்தி சம்பூரண தெய்வசக்தி, சத்துரு மைத்திரம். தனதான்யலாபம் ஆரோக்கியம் ஈதிபாத நிவாரணம் முதலிய சுபங்கள் ஏற்படும். வெள்ளியும் சனியும் சுபமாகும்.

8 **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விருச்சிகராசி சம்பந்தப்பட்ட விசாகபலன் ரோகத்தையும் கடன் விருத்தியையும் தொழிலாளிகளால் துன்பத்தையும் விவசாய காரிய விக்னங்களையும் ராஜாங்க உபத்திரவத்தையும் தரும். அனுஷம் கேட்டை பூரா பாதங்களும் நலனையே கொடுக்கும். தூரயாத்திரை புண்ணிய காரியங்கள் தேவ பிராம்மண பூஜனம். கோசம்ரக்ஷணம். விருத உபவாச நியமனம் மந்திர தந்திராதி சித்திகள் ஏற்படும். திங்கள், புதன், வெள்ளி சுபத்தைத்தரும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

தனுர்ராசி சம்பந்தப்பட்ட ஒன்பது பாதங்களும் ரொம்ப சந்தோஷமாய் ஓடும். விவசாய விருத்தி. காலிகன்று சேர்க்கை

நஷ்டதன பிராப்தி கீர்த்திபத்திரம் கிடைத்தல் பந்துமித்திர சேர்க்கை சுபசோபனாதிகளால் அடிக்கடி சஞ்சாரபலன் முதலிய சுபங்கள் நடக்கும், சனி செவ்வாய் நலன்தரும்.

**10. மகரம்:** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

உத்திராடம் திருவோணம் இருநக்ஷத்திர பாதங்களும் சென்றமாதம்போலவே நடப்பதோடு விசேஷமான தனதான்ய லாபமும் வியாபாரப் பெருக்கமும், நூதனமுறையில் கைத்தொழில் விருத்தியும் உத்தியோக லாபமும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். அவிட்டம் 1, 2 பாதங்கள் கஷ்டபலனையும் மனம் நிம்மதி இல்லாமலும் இருக்கும். நாஸ்தீகமில்லாதவர்கள் ரக்ஷிக்கப்படுவார்கள். சனி, செவ்வாய் சுபவாரமாகும்.

**11, கும்பம்:** அவிட்டம் $\frac{1}{2}$ சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

அவிட்டம் பின்னரையும் சதயம் 4 பாதமும் மிகுந்த கஷ்டத்தைத் தரும். வியாதிபயம் சத்துருபாதை, ரீணபாதை தொழில் நஷ்டம் மனக்கவலை முதலியவைகள் ஏற்படும். பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் சஞ்சாரத்தில் சுகசௌக்கிய லாபங்களைத் தரும். சனி புதன் சுபவாரமாகும்.

**12. பூரட்டாதி:** $\frac{1}{4}$ உத்திரட்டாதி, ரேவதி.

ரேவதி முதல்பாதம்தவிர மற்றபாதங்கள் சந்தோஷத்தைத் தரும். தொழில்கிடைக்கும். சத்துருநாசமும், கடன் நிவர்த்தியும் ஏற்படும். சதா கடவுள் ஸ்மரணை செய்துவர துன்பம் நீங்கி பூரண சுபமுண்டாகும். வெள்ளி திங்கள் நலன்தரும். சுபம்.

---

தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் — உரைவளம்" பொருட்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.

காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0

தபாற்செலவு வகையரு ரூ 2—0—0

கிடைக்குமிடம் :-

மானேஜர்,

தருமபுர ஆதீனம், தருமபுரம்.

மாயூரம் போஸ்ட்.

உ

குருபாதம்

பண்ணிசைப் பதிவுத்தட்டுப்

# பாராயணத் திருமுறைப் பாடல்கள்

---

வெளியீடு: **தருமபுர ஆதீனம்.**

பாடியவர் :

ஆதீன இசைப்புலவர், இசையரசு,

**திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள்**

தயாரிப்பு:

**The Gramaphone Company Ltd., Madras.**

---

இப்பாடல்களைக் கொண்ட இசைத்தட்டுகள், பத்து அடங்கியது.

| | | |
|---|---|---|
| செட் ஒன்றுக்கு விலை | ரூ. | 40-10-0 |
| பாக்கிங் செலவு | ரூ. | 2-0-0 |
| போஸ்டுமூலம் அனுப்ப தபாற்செலவு | ரூ. | 4-8-0 |

வேண்டுவோர் முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கிடைக்குமிடம் :—

காஷியர்,

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

தஞ்சை ஜில்லா.

## Extract from the Visitors' Book of
## Sri Amirthagateswaraswami Temple,
### Tirucadaiyur.

I had the privilege of visiting this famous temple and worshipping at the shrines. The management deserves all credit for the scrupulous cleanliness of the place and the orderliness that prevails in the temple premises. It was a treat to hear the children male and female chant the sacred verses. I trust that institutions like these may long be an inspiration to the devotees and soothing centres for those who need it.

(Sd.) A. RAMASWAMI MUDALIAR,
6—6—54.

---

## சமய பாட வகுப்பு நிறைவு விழா

குருபூசை விழாவினை ஒட்டி நடைபெற்ற கோடைக்காலச் சமயப் பயிற்சி வகுப்பு 22-5-54 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கோவை திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் நிறைவுவிழா நடைபெற்றது. வகுப்பிற் பயின்று தேர்ச்சிபெற்றோர்க்குத் தலைவர் அவர்களால் தகுதித்தாள் வழங்கப்பெற்றன.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—6—1954.